தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### சில்லறை விற்பனையில் சிறைக் காய்கறிகள்



**திருச்சி,**

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் வியாழக்கிழமை சிறை அங்காடியை திறந்துவைத்து பார்வையிடுகிறார் சிறைத் துறைத் துணைத் தலைவர் ஆர். துரைராஜ்.
திருச்சி மத்திய சிறை வளாகத்தில் விளைவிக்கப்படும் காய்கறிகளை விற்பனை செய்யும் மலிவு விலை சிறை அங்காடி வியாழக்கிழமை தொடங்கப்பட்டது.

சிறைவாசிகளை சீர்திருத்தி அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில், தமிழகத்தின் அனைத்து மத்திய சிறை வளாகங்களிலும் சிறை அங்காடிகள் தொடங்கப்படும் என கடந்த நிதிநிலை அறிக்கையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருந்தார்.

அதன்படி, கடந்தாண்டு டிசம்பர் 9-ம் தேதி சென்னை புழல் மத்திய சிறையில் சிறை அங்காடியை முதல்வர் தொடங்கி வைத்தார். இதன் தொடர்ச்சியாக திருச்சி மத்திய சிறை வளாகத்தில் சிறை அங்காடி வியாழக்கிழமை தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த அங்காடியைத் திறந்து வைத்து சிறைத் துறைத் துணைத் தலைவர் ஆர். துரைராஜ் பேசியது:

சிறைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் சிறை வளாகத்தில் உள்ள சிறை அங்காடியிலேயே "ப்ரீடம்' என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகிறது. இதில் சோப்புகள், காலணிகள், அஞ்சல் உறைகள், பேக்கரி பொருட்கள் ஆகியவற்றுடன் காய்கறிகளும், டீ மற்றும் கலவை சாதங்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

அதற்காக சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் பழங்கள், காய்கறிகள், கீரை வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. சிறைகளில் அங்காடிகள் அமைக்க அரசு ரூ. 10 லட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளது.


விற்பனையில் கிடைக்கும் தொகையில் இருந்து அந்த உற்பத்தியில் ஈடுபடும் சிறைவாசிகளுக்கும், அரசுக்கும், சிறைப் பணியாளர் நலநிதிக்கும் தலா 20 சதவிகிதமும், மீதமுள்ள 40 சதவிகிதம் தமிழ்நாடு சிறைத் துறை உற்பத்திப் பொருட்கள் நிதிக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது என்றார் துரைராஜ்.

இந்த நிகழ்ச்சியில் சிறைத் துறை கண்காணிப்பாளர் டி. பழனி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விரைவில் மீன், கோழி இறைச்சி**

சிறைக்குள் அமைக்கப்பட்டுள்ள மீன் பண்ணையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மீன்களும், கோழிப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் கோழி இறைச்சியும் விரைவில் விற்பனைக்கு வரவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## நெல்லி சாகுபடியில் நிறைவான மகசூல்!



**திருநெல்வேலி,**

சாகுபடியில் தற்போது காணப்படும் நோயைக் கட்டுப்படுத்தும் முறையை பின்பற்றுவதன் மூலம் நிறைவான லாபம் பெற்று பயனடையலாம் என விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு: நெல்லி நீண்ட ஆயுளையும், நிறைவான இளமையும் தரவல்லது. எனவேதான் அவ்வைக்கு அதியமான் நெல்லிக் கனியை பரிசாக வழங்கினான் போலும். தற்போது காய்ப்புப் பருவத்தில் உள்ள நெல்லியில் காணப்படும் பல்வேறு பூச்சி நோய்களை முறையாகக் கட்டுப்படுத்தி மகசூல் இழப்பைத் தவிர்க்கலாம்.

பட்டைத் துளைப்பான்: போதிய பராமரிப்பு இல்லாத மரங்களை இப்பூச்சித் தாக்கும். ஏப்ரல் மாதத்தில் இதன் தாக்குதல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. தாய் அந்துப்பூச்சி மரப்பட்டையின் பள்ளம் மற்றும் காயம்பட்ட இடத்தில் முட்டையிடும். எனவே மரப்பட்டையில் அரிவாளைக் கொண்டு குத்துதல் போன்ற மூலம் காயம் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும்.

புழு வெளியாகி துளைத்து உள்ளே செல்லும். இதன் தாக்குதலால் கிளைகளின் வளர்ச்சி தடைபடும். மகசூல் பருவங்களில் பூ பிடிப்பது குறையும். தாக்குதல் தீவிரமானால் கிளைகள் காய்ந்து மரமே இறக்கக் கூடும். தாய் அந்து இலைக் கோணங்களில் முட்டையிடுவதால் துவாரமும் கிளைப் பிரியும் கோணங்களில் காணப்படும்.

கட்டுப்படுத்துதல்: காய்ந்த தாக்கப்பட்ட பகுதிகளை அகற்றித் தோட்டத்தை சுத்தமாகப் பராமரிக்க வேண்டும். விளக்குப்பொறி வைத்து தாய் அந்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். ஈரமான கழிவுகள் இருக்கும்போது, துளைக்குள் முனை வளைந்த கம்பி செலுத்தி, புழுவை வெளியே எடுத்து அழிக்கலாம். உயிரியல் பூஞ்சாணக் கொல்லி பெவேரியா பேசியானா தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

சேதம் அதிகமாகும்போது, துளைகளில் பஞ்சில் 5 மிலி டைகுளோர்வாஸ் மருந்தை நனைத்து, உள்ளே வைத்து துளையை மண்கொண்டு அடைக்க வேண்டும்.

தண்டு வீங்கி நோய்: இந்நோயால் செடிகளிலும் மரங்களிலும் தண்டு வீங்கி முடிச்சுப் போல காணப்படும். இதனால் வளர்ச்சி பாதிக்கப்பட்டு பூ காய் பிடிப்பது பாதிக்கப்படும். தொடர்ந்து தாக்குதல் தென்பட்டால் மானோகுரோட்டோபாஸ் மருந்தை ஒரு லிட்டருக்கு 1.5 மி.லி வீதம் கலந்து 15 தினங்கள் இடைவெளியில் இரு முறை தெளி6க்க வேண்டும்.

பழத்துளைப்பான்: இந்த புழுவின் தாக்குதல் காய்ப்பிடிப்பு பருவத்தில் காணப்படும். பழுப்பான கருநீல நிற வண்ணத்துப்பூச்சி வெள்ளைநிற முட்டையை இளம் காய்களில் தனித்தனியாக இடுகிறது. முட்டையில் இருந்து வெளிவரும் புழு, பழத்தை துளைத்து விதையை உண்டு சேதப்படுத்தும். இதனால் பழங்கள் தரம் குறைந்து அழுகி வெம்பி விழுந்து விடும். இது நேரிடையாக மகசூல் இழப்பை ஏற்படுத்தும்.

நெல்லி மரங்களுக்கு அருகில் கொய்யா, மாதுளை

பயிரிடுவதைத் தவிர்க்க வேண்டும். தாக்கப்பட்ட பழங்களைச் சேகரித்து அழிக்க வேண்டும். டிரைகோகிரம்மா ஒட்டுண்ணிகளை ஏக்கருக்கு 1 லட்சம் வீதிம் விட்டு பழத்துளைப்பான் முட்டைகளை அழிக்கலாம். பூ பிடிக்கும் காலங்களில் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவிகிதம் அல்லது வேப்பெண்ணெய் 2 சதவிகிதம் அல்லது வேம்பு சார்ந்த மருந்தை 15 தினங்கள் இடைவெளியில் 4 முறை தெளிக்க வேண்டும். தாக்குதல் அதிகரிக்கும்போது, ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1.5 மிலி மனோகுரோட்டோபாஸ் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

தாக்கும் நோய்கள்: பழங்களில் சிறு கரும்துரு போன்ற புள்ளிகள் முதலில் தோன்றிப் பின் வளையம்போல் வட்டமாக உருவாகும். இவை இணைந்து பழத்தின் பெரும்பகுதி கருப்பாக மாறிவிடும். நோய் தாக்குதல் இலைகளில் தோன்றும்போது, சிவந்த பழுப்பு நிற துரு புள்ளிகள் சிதறியது போன்றோ அல்லது கூட்டமாக சேர்ந்தோ காணப்படும்.


தரு நோய் இலைகளைத் தாக்கினால் பழங்களில் தாக்குதல் இருக்காது. அதுபோல பழங்களைத் தாக்கினால் இலைகளில் தாக்குதல் இருக்காது. நோயினை நனையும் கந்தகம் மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 5 கிராம் வீதம் கலந்து தெளித்து கட்டுப்படுத்த வேண்டும்.

பறவைக்கண் புள்ளி நோய்: இலைகளில் வட்ட வடிவ பழுப்பு நிறப்புள்ளிகளில் மஞ்சள் நிற விளிம்புகளுடன் தோன்றும். பழங்களில் உள்குவிந்த திவலைகள் ஏற்பட்டு பின்னர் பழுப்பாகி வட்ட வரி வளையங்களாக மாறும். தாக்குதல் தீவிரமாகும்போது கனிகள் சுருங்கி அழுகிவிடும். நோயை ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் மாங்கோசெப் அல்லது ஒரு கிராம் கார்பண்டாசிம் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

வினையியல் குறைபாடு: கனிகளின் வெளிப்புறம் நன்கு தோற்றமளித்தாலும் உள் பகுதிகளில் தீய்ந்த பழுப்பு நிறச் சதைப்பகுதி காணப்படும். பின் கரும்பழுப்பாகி கடின பிசின்போல் மாறிவிடும். என்.ஏ. 6 மற்றும் என்.ஏ. 7 ரகங்களில் இக் குறைபாடு தோன்றுவதில்லை. இந்த குறைபாடுகளை ஒரு லிட்டர் நீருக்கு 4 கிராம் துத்தநாக சல்பேட், 4 கிராம் போராக்ஸ் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

இத்தகைய நோய் பாதுகாப்பு முறைகளை முறையாக பின்பற்றுவதன் மூலம் நெல்லி சாகுபடியில் நிறைவான மகசூல் பெற்று பயன்பெறலாம் என்றார் அவர்.

**அதிக மகசூல் தரும் நவீன கரும்பு சாகுபடி!**



**விழுப்புரம்,**

சாதாரண முறையில் நடவு செய்வதன் மூலம் ஒரு ஏக்கருக்கு 30 முதல் 40 டன் வரை விவசாயிகள் மகசூல் பெறுகின்றனர். ஆனால் எஸ்.எஸ்.ஐ. எனப்படும் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறையில் நடவு செய்வதன் மூலம் ஒரு ஏக்கருக்கு 70 முதல் 80 டன் வரை மகசூல் கிடைக்கும்.

நீடித்த நிலையான கரும்பு சாகுபடி (எஸ்.எஸ்.ஐ.) எனப்படும் நவீன தொழில் நுட்பத்தின் மூலம் கரும்பு சாகுபடி செய்தால் இரண்டரை மடங்கு மகசூல் கிடைக்கும் என விவசாயத் துறை அதிகாரிகள் யோசனை தெரிவிக்கின்றனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் கரும்பு மிக முக்கியமான பணப்பயிர். மாவட்டத்தில் 7 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவை மட்டும் இல்லாமல் வெளி மாவட்டத்தில் உள்ள 6 சர்க்கரை ஆலைகளுக்கும் கரும்பு அனுப்பப்படுகிறது. கரும்புக்கான தேவை அதிகம் இருப்பதால் இம் மாவட்டத்தில் 1,20,000 ஹெக்டேரில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது.

சாதாரண முறையில் நடவு செய்வதன் மூலம் ஒரு ஏக்கருக்கு 30 முதல் 40 டன் வரை விவசாயிகள் மகசூல் பெறுகின்றனர். ஆனால் எஸ்.எஸ்.ஐ. எனப்படும் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறையில் நடவு செய்வதன் மூலம் ஒரு ஏக்கருக்கு 70 முதல் 80 டன் வரை மகசூல் கிடைக்கும்.

சாதாரண முறையில், ஒரு ஏக்கருக்கு கரும்பு பயிர் செய்வதற்கு 30 ஆயிரம் கரணைகள் தேவைப்படும். 2-3 அடி இடைவெளியில் நடுவார்கள். ஆனால் நவீன முறையில் ஏக்கருக்கு 5 ஆயிரம் நாற்றுகள் இருந்தால் போதுமானது. குறைந்தது 5 அடி இடைவெளியில் நாற்றுகளை நட வேண்டும். தண்ணீர் தேவையும் மிகக் குறைவு. குறைந்த அளவு ஈரப்பதம் இருந்தாலே போதுமானது. காற்று மற்றும் சூரிய ஒளி புகுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம்.

நவீன முறையில் கரும்பு சாகுபடி செய்ய சொட்டு நீர்ப் பாசனம் அவசியம். சொட்டு நீர்ப் பாசனத்தை பயன்படுத்துவதன் மூலம் 40 சதவீத தண்ணீரை சேமிக்க முடியும். மேலும் சொட்டு நீர்ப் பாசனம் மூலம், நீரில் கரையும் உரங்களையும் பயிருக்கு விநியோகிக்க முடியும். வேலை ஆள்களுக்கான தேவையும் குறைகிறது.

இதுகுறித்து விவசாயத் துறை இணை இயக்குநர் இர.சக்கரவர்த்தி கூறுகையில், அரசு சொட்டு நீர் பாசனம் அமைக்க சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம் அளிக்கிறது. பெரு விவசாயிகளுக்கு 75 சதவீத மானியம் அளிக்கப்படுகிறது. இதேபோல் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.30 ஆயிரம் மதிப்புள்ள நீரில் கரையும் உரங்களும் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

இத் திட்டத்தை செயல்படுத்துவதில் விழுப்புரம் மாவட்டம் முன்னோடி மாவட்டமாக உள்ளது. இந்த நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டத்தில் ஊடு பயிராக வேறு சில பயிர்களை பயிரிட முடியும். இதனால் கரும்பு மகசூல் பாதிக்காது. விவசாயிகள் கூடுதல் லாபம் பெறலாம் என்றார்.

## தோட்டக்கலைப் பயிருக்கு மானியம் பெற தகுதியான பயனாளிகள் இல்லை

**திண்டுக்கல்,**

தோட்டக்கலைத் துறை மூலம் தாழ்த்தப்பட்டோருக்கு வழங்கப்படும் மானியங்களை பெறுவதற்கு தகுதியான பயனாளிகள் கிடைக்காததால், நிதி வழங்கப்படாமல் உள்ளது.

தோட்டக்கலைத் துறை தொடர்பான ஆய்வுக்கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம், நீர்வள நிலவள மேம்பாட்டுத் திட்டம், மானாவாரி அபிவிருத்தி திட்டம், தேசிய மருத்துவப் பயிர் அபிவிருத்தி திட்டம் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

துல்லிய பண்ணைத் திட்டத்தில், தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு வழங்கப்படும் முழு மானியத் திட்டத்தில் பயனாளிகள் தேர்வு செய்யப்படாதது குறித்து ஆட்சியர் கேள்வி எழுப்பினார். இத்திட்டத்தின் கீழ் மானியம் பெறுவதற்கு தாழ்த்தப்பட்ட விவசாயிகளிடம் சொந்தமாக நிலம் இருக்க வேண்டும் என்பதால், பலர் மானியத் தொகை பெற முடிவதில்லை எனக் கூறப்பட்டது.

இருப்பினும், அனைத்து பகுதி தோட்டக்கலை உதவி இயக்குநர்களும், கிராமம்வாரியாகச் சென்று தகுதியான விவசாயிகளை 15 நாள்களுக்குள் கண்டறிந்து, மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஆட்சியர் உத்தரவிட்டார்.

மேலும், மாவட்டத்தில் நிலவும் வறட்சி காரணமாக, விவசாயிகள் குறுகிய காலத்தில் பயன்பெறும் வகையில், காய்கறி பயிர் விதைகள் மற்றும் இடுபொருள்களை விரைவில் விநியோகம் செய்யவேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கார்த்திகேயன், தோட்டக்கலை துணை இயக்குநர் என். ராமநாதன், அனைத்து வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், தோட்டக்கலை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் கத்தரிக்காய் விலை ஏற்றம்; தக்காளி குறைந்தது**

**ஒட்டன்சத்திரம்,**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் காந்தி காய்கறி சந்தையில் கத்தரிக்காய் விலை உயர்ந்தும், தக்காளி விலை குறைந்தும் விற்பனையானது.

ஒட்டன்சத்திரம் காந்தி காய்கறி மார்க்கெட்டுக்கு பல தரப்பட்ட காய்கறிகள் விற்பனைக்கு வருகின்றன. ஒட்டன்சத்திரத்தை சுற்றியுள்ள அம்பிளிக்கை, சிந்தலைப்பட்டி, ஓடைப்பட்டி, குத்திலுப்பை, மண்டவாடி, கள்ளிமந்தையம், பொருளூர், தேவத்தூர், பெரியகோட்டை, காவேரியம்மாபட்டி, அரசப்பபிள்ளைபட்டி, விருப்பாச்சி, சத்திரப்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, போடுவார்பட்டி, காளிபட்டி, சிந்தலவாடம்பட்டி, மூலச்சத்திரம் ஆகிய கிராமங்களில் இருந்து கத்தரிக்காய், காளிபிளவர், பீன்ஸ், பீட்ருட், பாகற்காய், தக்காளி, அவரைக்காய், வெண்டைக்காய், கொத்தவரை உள்ளிட்ட பல்வேறு காய்கறிகள் விற்பனைக்கு வருகின்றன.

இவற்றை, தமிழக மற்றும் கேரள வியாபாரிகள் மொத்தமாக கொள்முதல் செய்கின்றனர். பருவமழை பொய்த்துள்ளதால், சந்தைக்கு காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளது.

இருப்பினும், தக்காளி வரத்து அதிகரித்துள்ளதால், அவற்றின் விலை குறைந்துள்ளது. 14 கிலோ கொண்ட ஒரு தக்காளி பெட்டி ரூ. 30-க்கு விற்பனையானது.

வியாழக்கிழமை, சந்தையில் விற்பனையான காய்கறிகளின் விலை நிலவரம் வருமாறு: கத்தரிக்காய் (டிஸ்கோ) 1 பை ரூ. 150, வெள்ளை 1 பை ரூ. 800, பச்சை 1 பை ரூ. 310, 20 பூ கொண்ட காளிபிளவர் ரூ. 150, செடி முருங்கை கிலோ ரூ. 40, கரும்பு முருங்கை ரூ. 40, மர முருங்கை ரூ. 36, வெண்டைக்காய் ரூ. 26, பீன்ஸ் ரூ. 35, சுரைக்காய் ரூ. 7, அவரை ஒட்டு ரகம் ரூ. 27, தம்பட்ட அவரை ரூ. 10, கோழி அவரை ரூ. 19, பெல்ட் அவரை ரூ. 20, பாகற்காய் ரூ. 27, புடலங்காய் ரூ. 10, பீட்ரூட் ரூ. 8, பொரியல் தட்டப்பயிர் ரூ. 25, பூசணிக்காய் (சுனாமி) ரூ. 7, இளவல் ரூ. 7, சிகப்பு அர்ஜூனா ரூ. 3.50, நாட்டு ரகம் ரூ. 3.50, நெல்லிக்காய் ரூ. 17, சின்னவெங்காயம் ரூ. 20, பல்லாரி வெங்காயம் ரூ. 11, நார்த்தங்காய் ரூ. 40, கொத்தவரை ரூ. 30, மாங்காய் கல்லாமை ரூ. 50, உருட்டு ரூ. 39, மிளகாய் சம்பா ரூ. 9, உருண்டை ரூ. 13 முதல் 15 வரை, வாழை நாட்டு ரகம் ரூ. 15, எலுமிச்சை ரூ. 40, சாம்பார் வெள்ளரி ரூ. 13.

**வறட்சியை தாங்கி வளர உதவும் பாக்டீரியா கரைசல்**

**ராமநாதபுரம்,**

வறட்சியை தாங்கி வளர உதவும் பி.பி.எப்.எம். பாக்டீரியா கரைசலை ராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் நிலையம் மாவட்டத்தில் முதல் முறையாக வியாழக்கிழமை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்துள்ளது.

ராமநாதபுரம் அருகேயுள்ள ஆலங்குளத்தில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில் வயல்விழா நடத்தப்பட்டது. இவ்விழாவில் மாலங்குடி, ஆலங்குளம், கண்ணாங்குடி கிராமங்களைச் சேர்ந்த 75க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இவ்விவசாயிகளுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்பான பி.பி.எப்.எம். பாக்டீரியா கரைசல் அறிமுகம் செய்யப்பட்டது. இது குறித்து விவசாயிகளிடையே பேசிய வேளாண் அறிவியல் மையத்தின் தலைவர் பேராசிரியர் இரா.துரைசிங் பேசியது:

ராமநாதபுரம் மாவட்டம் அடிக்கடி வறட்சிக்கு இலக்காகும் மாவட்டம். இம்மாவட்டத்தில் மானாவாரியாக நெல் நேரடி புழுதி விதைப்பாக சாகுபடி செய்யப்படுகிறது.

இவ்வாறு செய்யப்படும் சாகுபடியானது, பயிர் முளைத்து தூர்கட்டும் பருவத்திலிருந்து வறட்சிக்கு உள்ளாகி இழப்பை ஏற்படுத்துகிறது.

இத்தகையை பிரச்னைக்குத் தீர்வு காணவே, வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் இப்பாக்டீரியா கரைசல் கண்டுபிடிக்கப்பட்டு, ராமநாதபுரம் வேளாண் அறிவியல் நிலையம் மூலமாக மாவட்டத்தில் உள்ள 10 ஒன்றியங்களிலும் இதனை அறிமுகப் படுத்தி வருகிறோம் என்றார். விவசாயிகளும் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

விழாவு ஏற்பாடுகளை வேளாண் அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர்கள் முனைவர் க.ஆனந்த்,வெ.மீனாட்சி,முனைவர் ராம்குமார் ஆகியோர் செய்திருந்தனர். உதவிப் பேராசிரியர் துக்கையண்ணன் நன்றி கூறினார்.

**தென்னை சாகுபடி தொழில் நுட்ப பயிற்சி முகாம்**

**ராமநாதபுரம்,**

ராமநாதபுரம் அருகேயுள்ள பெருங்குளம் கிராமத்தில் தென்னை சாகுபடி தொழில் நுட்பப் பயிற்சி முகாம் மற்றும் விஞ்ஞானிகள் விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு ராமநாதபுரம் வேளாண்மை இணை இயக்குநர் நா.வீ. கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் எஸ்.எம். உதுமான், அட்மா திட்ட துணை இயக்குநர் எஸ்.எஸ். சேக் அப்துல்லா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ராமநாதபுரம் மாவட்ட தென்னை சாகுபடி சங்கத் தலைவர் செல்லத்துரை அப்துல்லா வரவேற்றுப் பேசினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை.யின் தென்னை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ராஜமாணிக்கம், ராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் துரைசிங் ஆகியோர் தலைமையில் விஞ்ஞானிகள் குழுவினர் தென்னை சாகுபடி விவசாயிகள் குழுவினரோடு கலந்துரையாடல் நடத்தினர்.

தென்னை சாகுபடியில் நீர் நிர்வாகம், சொட்டு நீர்ப் பாசனம், நீர் மேலாண்மை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், நுண்ணூட்டச் சத்து குறைபாடுகள், பயிர் பாதுகாப்பு தொழில் நுட்பங்கள், தென்னையில் ஊடுபயிர் தொழில் நுட்பங்கள் ஆகியன குறித்தும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கமும் செய்து காட்டப்பட்டது.

பயிற்சி முகாமில் முன்னோடி தென்னை சாகுபடி விவசாயி இஸ்மாயில், தென்னை சாகுபடி சங்கச் செயலர் தனுக்கோடி ஆகியோர் உள்பட தென்னை விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் வங்கிக் கடன் பெற விளக்க கையேடு**

**மேட்டுப்பாளையம்,**

மேட்டுப்பாளையம்-கோத்தகிரி சாலையிலுள்ள வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகள் சவுக்கு, தீக்குச்சி, மலைவேம்பு போன்ற மரப் பயிர் சாகுபடிக்கு வங்கிக் கடன் பெறத் தேவையான விவரங்கள் அடங்கிய கையேடு வெளியீட்டு விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் பங்கேற்று, திட்டப் பணிகளை ஆய்வு செய்வதற்காக புதுதில்லியிலுள்ள தேசிய வேளாண் புதுமை திட்டத்தின் ஆராய்ச்சி திட்டக் குழு தலைவர் எஸ்.எல்.மேத்தா மற்றும் தேசிய திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர்.இசக்கியல் ஆகியோர் வனக் கல்லூரிக்கு வருகை தந்தனர். கல்லூரி முதல்வர் துரைராசு தலைமையில் அவர்களுக்கு வரவேற்பு கொடுக்கப்பட்டது.

பின்னர், கல்லூரி நூலக அரங்கில் நடைபெற்ற விழாவில் திட்ட செயல்பாடுகள் குறித்து திட்டத் தலைவர் பார்த்திபன் பேசியது:

வனக் கல்லூரியில் 2008-ம் ஆண்டுமுதல் செயல்படுத்தப்பட்டு வரும் ஆலைசார்ந்த வேளாண் காடுகளுக்கான உற்பத்தி மற்றும் விற்பனை தொடர் சங்கிலி திட்டத்தின் மூலமாக மரம் சார்ந்த ஆலைகள், விவசாயிகள், வங்கி நிறுவனத்தினர் அனைவரும் ஒரே அணியில் இருந்து செயல்பட்டு பயன்பெற்று வருகிறார்கள். இதன் மூலமாக தற்போது 29 மாவட்டங்களில் சுமார் 39,000 ஹெக்டரில் மரங்கள் வளர்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதில், பங்கேற்றுள்ள 17 ஆலைகள் துணையுடன் விவசாயிகள் சாகுபடி செய்யும் விளை பொருட்களுக்கு நல்ல வருமானமும் கிடைத்து வருகிறது. இத் திட்டத்தின் மூலமாக தரமான குளோன்களை நடவு செய்து அதிக லாபம் பெறவும் விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இத் திட்டத்திற்காக இந்தியாவிலேயே முதன்முதலாக வனக் கல்லூரி மூலமாக யுனைடெட் காப்பீட்டு நிறுவனம் மரப் பயிர்களைக் காப்பீடு செய்ய முன்வந்துள்ளது என்றார்.

பின்னர், சவுக்கு, மலைவேம்பு, தீக்குச்சி ஆகிய மரப் பயிர் வளர்ப்பிற்குத் தேவையான வங்கிக் கடன் பெறுவது குறித்த விளக்க கையேட்டை திட்ட குழுத் தலைவர் மேத்தா வெளியிட, தமிழ்நாடு காகித ஆலை, சேஷாயி, ஆம்பிபிளை, லிபர்ட்டி நிறுவன நிர்வாகிகள் அதைப் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து, திருவண்ணாமலையில் ஜெகம் ராதாகிருஷ்ணன் சார்பில் புதியதாக அமைக்கப்பட்ட மலைவேம்பு உற்பத்தியாளர்கள் நிறுவனத்தையும், சிவகங்கையில் சத்தியமூர்த்தி சார்பில் புதியதாக நிறுவப்பட்ட மரம் சார்ந்த தொழில் நிறுவனத்தையும் ஆராய்ச்சி திட்டக் குழு தலைவர் மேத்தா தொடங்கி வைத்தார். இதில், ஆலை சார்ந்த நிறுவன அதிகாரிகள், வங்கி, காப்பீட்டு நிறுவன அதிகாரிகள், விவசாயிகள், கிராம தொழிற்கூட நிறுவனத்தினர் உள்பட தமிழகம் மற்றும் குஜராத், கர்நாடகம், கேரளம், ஆந்திர மாநிலங்களைச் சேர்ந்த பயனாளிகளும் கலந்து கொண்டனர். கல்லூரி துறைத் தலைவர் சேகர் நன்றி கூறினார்.

தொடர்ந்து, திட்ட ஆய்வுக் குழுவினர் கல்லூரியில் அமைக்கப்பட்ட குளோனல் நாற்றங்கால், எரிகட்டி உற்பத்திப் பிரிவு, ஆலை சார்ந்த மர வளர்ப்பு உள்பட பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மர வளர்ப்பு பண்ணைகளையும் பார்வையிட்டனர்.

**இன்று காங்கயம் இன கால்நடை கருத்தரங்கம்**

**காங்கயம்,**

காங்கயத்தில் வெள்ளிக்கிழமை (பிப்ரவரி 7) தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் காங்கயம் இன கால்நடை கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. சனிக்கிழமை (பிப்ரவரி 8) கால்நடைக் கண்காட்சி நடைபெறகிறது.

இது குறித்து, கால்நடை பராமரிப்புத் துறை திருப்பூர் மண்டல இணை இயக்குநர் எல்.நாகராஜன் கூறியதாவது :

பாரம்பரியமும், பெருமையுமிக்க நமது மண்ணின் கால்நடை இனமான காங்கயம் கால்நடைகளைப் போற்றிப் பாதுகாத்து மேம்படுத்தும் பொருட்டு, காங்கயம் - சென்னிமலை சாலையில் உள்ள என்.எஸ்.என்.நடராஜ் திருமண மண்டபத்தில் வெள்ளிக்கிழமை (பிப்ரவரி 7) காங்கயம் இன கால்நடைகளை அழிவில் இருந்து பாதுகாப்பது குறித்த கருத்தரங்கம் நடைபெறவுள்ளது.இதில், கால்நடை பராமரிப்புத் துறை கூடுதல் இயக்குநர்கள், தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக்கழக பேராசிரியர்கள், துறை அலுவலர்கள் பங்கேற்ற ஆலோசனைகள் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து சனிக்கிழமை (பிப்ரவரி 8) என்.எஸ்.என்.திருமண மண்டபத்தை ஒட்டியுள்ள திறந்த வெளி மைதானத்தில், காங்கயம் இன கால்நடை கண்காட்சி நடைபெறுகிறது. இதில் பங்கேற்க திருப்பூர், ஈரோடு, கரூர், திண்டுக்கல் மாவட்டங்களில் இருந்து கால்நடைகள் கொண்டுவரப்படுகின்றன. இக்கண்காட்சியில் சிறந்த மாடுகளுக்கு பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

இதில், காங்கயம் இன மாடுகளின் வரிசையில் 6 வகைகளுக்கு முதல் பரிசாக தலா ரூ. 10 ஆயிரம் வழங்கப்படவுள்ளது. 2-ஆம் பரிசாக 12 மாடுகளுக்கு தலா ரூ. 3

ஆயிரமும், 3-ஆம் பரிசாக 24 மாடுகளுக்கு தலா ரூ. 2 ஆயிரம் வீதமும், ஆறுதல் பரிசாக 36 மாடுகளுக்கு தலா ஆயிரம் ரூபாய் வீதம் என மொத்தம் ரூ. 1 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பில் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

இக்கண்காட்சியில் சுமார் 700-க்கும் மேற்பட்ட காங்கயம் இன கால்நடைகள் கலந்து கொள்ளவுள்ளன. கண்காட்சியைப் பார்வையிட மாடு வளர்க்கும் விவசாயிகள் மட்டுமல்லாது, பொதுமக்களையும் அழைக்கிறோம் என்றார்.

**தாராபுரம் பகுதியில் கூடுதலாக 3 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்**

**திருப்பூர்,**

தாராபுரம் பகுதியில் கூடுதலாக 3 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் துவங்கப்பட்டு, வெள்ளிக்கிழமை (பிப்ரவரி 7) முதல் நெல் கொள்முதல் செய்யப்படவுள்ளது.

இதுகுறித்து, ஆட்சியர் கு.கோவிந்தராஜ் வியாழக்கிழமை வெளியிட்ட செய்தி:

திருப்பூர் மாவட்டத்தில் நடப்பு ஆண்டிற்கான சம்பா பருவத்தில் நெல் பயிரிடப்பட்டு, அறுவடை செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்வதற்காக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக மடத்துக்குளம், காங்கயம், தாராபுரம் வட்டாரங்களில் மடத்துக்குளம், கல்லாபுரம், கணியூர், வெள்ளக்கோவில், முத்தூர் கமிட்டி, முத்தூர் வேலம்பாளையம், பழையகோட்டை, நத்தக்காடையூர், பரஞ்சேர்வழி என 9 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ஏற்கனவே துவங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தாராபுரம் வட்டாரத்தில் கூடுதலாக, அலங்கியம், குளத்துப்பாளையம், கோவிந்தாபுரம் என 3 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு, வெள்ளிக்கிழமை (பிப்ரவரி 7) முதல் நெல் கொள்முதல் செய்யப்படவுள்ளது.

தமிழக அரசின் குறைந்தபட்ச ஆதார விலையாக (கிரேடு ஏ ரகம்) நெல்லுக்கு ரூ. 1,345, ஊக்கத்தொகையாக ரூ. 70 என ஒரு குவிண்டாலுக்கு ரூ. 1,415 விலை

நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொது ரக நெல்லுக்கு குறைந்தபட்ச ஆதார விலையாக ரூ. 1,310, ஊக்கத்தொகை ரூ. 50 என ஒரு குவிண்டாலுக்கு ரூ. 1,360 நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே விவசாயிகள், நடப்பு சம்பா பருவத்தில் அறுவடை செய்த நெல்லை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி கொள்முதல் நிலையங்களில் இடைத்தரகர்கள் இன்றி விற்கலாம். சரியான எடையளவு வைத்து அரசு நிர்ணயித்துள்ள ஊக்கத்தொகையுடன் கூடிய ஆதார விலைக்கு நெல் விற்பனை செய்து விசாயிகள் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பவானிசாகர் நீர்மட்டம்**

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 41.37 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 606 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 600 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.6 டி.எம்.சி.

**மீண்டும் களைகட்டியது கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தை**

**ஈரோடு,**

கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தையில் மாடுகள், எருமைகளின் விற்பனை மீண்டும் களைகட்டியுள்ளது.

கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தையில் புதன்கிழமை தோறும் இறைச்சிக்கான மாடுகள், எருமைகளும், வியாழக்கிழமை தோறும் வளர்ப்புக்கான மாடுகள், எருமைகளும் விற்பனை செய்யப்படுகின்றன.ஈரோடு, நாமக்கல், கரூர், திண்டுக்கல், திருச்சி, திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது கால்நடைகளை இச்சந்தையில் விற்பனை செய்து வருகின்றனர்.

தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம், கோவா மாநிலங்களைச் சேர்ந்த வியாபாரிகள் இவற்றை வாங்கிச் செல்வது வழக்கம்.கோமாரி நோய் காரணமாக இச்சந்தை நவம்பர் இறுதியில் இருந்து ஜனவரி இறுதி வரை தாற்காலிகமாக மூடப்பட்டது. இரு வாரங்களுக்கு முன், நிபந்தனை அடிப்படையில் இச்சந்தையைத் திறக்க மாவட்ட நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது. இருப்பினும் 2 வாரங்களாக இச்சந்தையில் மாடுகள், எருமைகள் விற்பனை குறைவாகவே இருந்தது. இந்த வாரம் 500 பசுக்களும், 350 எருமைகளும் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பிற மாநிலங்களைச் சேர்ந்த வியாபாரிகள் போட்டி போட்டு இவற்றை வாங்கிச் சென்றனர். பசுக்கள் ரூ. 16,000 முதல் ரூ. 35,000 வரையும், எருமைகள் ரூ. 18,000 முதல் ரூ. 36,000 வரையும் விற்பனையானதாக சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர்.

**லாபத்தில் இயங்கும் டேன்டீ தொழிற்சாலை!**

**குன்னூர்,**

நஷ்டத்தில் இயங்கிவந்த டேன்டீ தொழிற்சாலை தற்போது ரூ. 403 லட்சம் லாபத்தில் இயங்கி வருவதாக, வனத்துறை அமைச்சர் எம்எஸ்எம் ஆனந்தன் தெரிவித்தார்.

தாயகம் திரும்பிய தமிழர்களுக்காக உருவாக்கப்பட்ட டேன்டீ தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிய வனத்துறை அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் பேசியது:

நீலகிரி மாவட்டம், குன்னூரில் அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணிபுரியும் 5,500 தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 17 லட்சம் செலவில் இலவச மேலங்கி வழங்கப்படுகிறது. மேலும், 24 டேன்டீ தொழிலாளர்களுக்கு பணி நிரந்தரம் உள்ளிட்ட நலதிட்ட உதவிகள் தற்போது தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளன.

தமிழக அரசு சார்பில் தாயகம் திரும்பிய தமிழர்களுக்காகத் துவங்கப்பட்ட டேன்டீ தொழிற்சாலை கடந்த 2011-இல் ரூ. 16 கோடி நஷ்டத்தில் இயங்கி வந்தது; இது தற்போது ரூ. 403 லட்சம் லாபத்தில் இயங்கி வருகிறது. டேன்டீ தொழிலாளர்களின் குடியிருப்புகளில் கழிப்பிடம், நடைபாதை உள்ளிட்வற்றைச்

சீரமைக்க ரூ. 110 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கோத்தகிரி பகுதியில் உள்ள குயின்சோலா தேயிலை தொழிற்சாலையில் இயற்கை முறையில் தயாரிக்கும் ஆர்கானிக் மற்றும் கிரீன் தேயிலை உற்பத்திக்கு டேன்டீ நிர்வாகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

இந்த விழாவில் டேன்டீ நிர்வாக இயக்குனர் பாலாஜி, அதிமுக மாவட்டச் செயலாளர் கலைச்செல்வன், உதகை சட்டப்பேரவை உறுப்பினர் புத்திசந்திரன்,அண்ணா தோட்டத் தொழிற்சங்கத்தின் மாநிலச் செயலாளர் பி.ஜெயராம், மாவட்ட ஊராட்சித் தலைவர் மேனகா அழகுராஜ், நகர்மன்றத் தலைவர் சி.கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**உதகையில் சந்தை ஒருங்கிணைப்பாளர் கருத்தரங்கு**

**உதகை,**

உதகையில் பெருநகர காய்கறி தொகுப்புத் திட்டத்தின் கீழ் சந்தை ஒருங்கிணைப்பாளர் கருத்தரங்கு நடைபெற்றது.

உதகையிலுள்ள தோட்டக்கலை வணிக வளாகத்தில் வியாழக்கிழமை இக்கருத்தரங்கைத் தொடங்கிவைத்த மாவட்ட ஆட்சியர் பி.சங்கர், காய்கறி உற்பத்தி முதல் சந்தைப்படுத்துதல் வரை அரசு வழங்கும் மானியத் திட்டங்கள் குறித்து விவரித்தார்.

உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் பயன்பெறும் இச்சிறப்புத் திட்டத்தை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஆட்சியர் அறிவுறுத்தினார். தொடர்ந்து அவர் பேசியது:

நீலகிரி மாவட்டத்தில் அனிக்கொரை, கீழ்கவ்வட்டி கிராமங்களில் பெருநகர காய்கறி வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டிருந்தாலும், சந்தைக்குக் கொண்டுவரப்படும் காய்கறிகளில் பாதிக்கு மேல் திரும்பிவிடுவதால், விவசாயிகள் முழு ஒத்துழைப்பு அளிக்காமலிருந்தனர்.

எனவே, இத்திட்டத்தில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டு சந்தை ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் அனைத்து காய்கறிகளும் கொள்முதல் செய்யப்பட்டு, சந்தைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விற்பனை மையத்திற்குக் கொண்டு வரப்படும் அனைத்து காய்கறிகளையும் சந்தை ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் பெருநகர அங்காடிகளுக்கு நேரடியாகவே கொண்டுசெல்ல இருப்பதால் இடைத்தரகர்கள் நுழைய முடியாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இதனால் உரிய விலை கிடைத்து விவசாயிகள் முழுமையாக பயனடைவர். புத்தம் புதிய மலைக் காய்கறிகள் கிடைப்பதால் பெருநகர மக்களும் பயனடைவர் என்றார்.

வரவேற்புரையாற்றிய மாவட்ட தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் மணி பேசுகையில், உதகை, கோத்தகிரி, குன்னூர் பகுதிகளில் சந்தை ஒருங்கிணைப்பாளர்களாக நால்வர் நியமிக்கப்பட உள்ளதாகத் தெரிவித்தார்.

வேளாண்மை வணிக துணை இயக்குநர் சந்திரன் பேசுகையில், விளைபொருட்களை சந்தைப்படுத்துதல், விற்பனை செய்யப்படாத காய்கறிகளை குளிர்சாதன சேகரிப்பு மையத்தில் இருப்பு வைக்க வணிகத்துறை மூலம் காரமடையில் மையம் செயல்படுவதாகத் தெரிவித்தார்.

சந்தை ஒருங்கிணைப்பாளர்களின் பணி தொடர்பாக விவசாயிகளின் சந்தேகங்களுக்கு  விளக்கமளிக்கப்பட்டது. இக்கருத்தரங்கில் தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் டாக்டர் வி.ராம்சுந்தர், ராமகிருஷ்ணன் உள்ளிட்டோருடன் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

**"கோடையில்மக்காச் சோளம்பயிரிடலாம்'**

**குடியாத்தம்,**

குடியாத்தம் வட்டாரத்தில், மாநில அரசின் கோடைப் பயிர் சாகுபடி திட்டத்தின்கீழ், தற்போது போதிய சூழல் உள்ளதால் கோடை பயிராக மக்காச்

சோளம் பயிரிடலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் ஈ.ராஜேஸ்வரி விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: குடியாத்தம் வட்டாரத்தில் கோடை பயிராக மக்காச் சோளம் பயிரிடலாம் என வேளாண் விஞ்ஞானிகள் பரிந்துரைத்துள்ளனர்.

இப்பயிரை தென்னையில் ஊடு பயிராகவும் செய்யலாம். மக்காச் சோளத்தில் பூச்சி நோய் உள்ளிட்ட பராமரிப்புச் செலவுகள் குறைவு என்பதாலும், கோடைகால வெயிலை தாங்கி, குறைந்தளவு நீர்ப் பாசனத்தில் வளரும் பயிர் என்பதாலும், தற்போது விதைப்பு துவங்கினால் சரியான பருவமாக இருக்கும். இப்பயிர் 3 மாதத்தில் அறுவடைக்குத் தயாராகி விடும்.

மக்காச் சோளம் மனிதர்களுக்கு உணவாகப் பயன்படுவது மட்டுமல்லாமல் கோழிப்பண்ணை போன்றத் தொழிலுக்கு முக்கியத் தீவனமாக பயன்படுத்தப்படுவதால் விவசாயிகளுக்கு லாபகரமாகவும் அமையும் என குறிப்பிட்டுள்ளார் ராஜேஸ்வரி.

**மறுதாம்பு கரும்பில் அதிக மகசூல் எடுக்க வழிமுறைகள்**

**தண்டராம்பட்டு,**

நடவு கரும்பை விட மறுதாம்பு கரும்பில் செலவு குப். றவு. மேலும் அதிக மகசூலும் எடுக்க முடியும். கரும்பு வெட்டியவுடன் சோகையை தண்ணீர் பாய்ச்சும் வாய்க்காலில் ஒதுக்கியோ அல்லது வயல் முழுவதும் சமமாக பரப்பியோ எரிக்க வேண்டும். பின்பு வேலையாள்கள் மூலம் கூரிய கத்தி கொண்டு அனைத்து கரும்பு கட்டைகளையும் பூமி மட்டத்தில் பக்கவாட்டில் வெட்டிவிட வேண்டும். அப்படி செய்தால் முளைத்து வரக்கூடிய அனைத்துப் பயிர்களும் சமமாக இருக்கும்.

கங்கு அறுத்தல்: ஏக்கருக்கு 1 மூட்டை யூரியாவை கட்டையின் மீது தூவி தண்ணீர் பாச்ச வேண்டும். இந்த ஈரப்பதத்திலேயே மாட்டு ஏர் ஓட்டுதல் (கங்கு அறுத்தல்) வேண்டும். இதனால் பழைய வேர்கள் அறுபட்டு புதிய வேர்கள் உண்டாகும். பின்பு ஏக்கருக்கு 3 மூட்டை சூப்பர் பாஸ்பேட் உரத்தை ஏர் ஓட்டிய உழவுசாலில்

போட்டு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மேற்கண்ட வேலைகள் அனைத்து கரும்பு வெட்டிய 7 நாள்களுக்கு (1 வாரம்) செய்து முடிக்க வேண்டும். இப்படி செய்தால் அனைத்துக் கட்டைகளும் 1 மாதத்தில் முளைத்துவிடும்.

போக்கிடங்களை நிரப்புதல்: மறுதாம்பில் ஒரு பயிருக்கும், மற்றொரு பயிருக்கும் இடையே உள்ள இடைவெளி முக்கால் அடிக்கு மேல் இருந்தால் முளைத்த, துளிர்த்த கட்டையில் பாதியை மட்டும் மண்வெட்டியால் வெட்டி இடைவெளி உள்ள இடத்தில் பள்ளம் நட்டு மண் கொண்டு நன்கு அழுத்திட வேண்டும். உடன் நீர் பாய்ச்ச வேண்டும்.

நுண்ணூட்டக் கரைசல் தெளித்தல்: மறுதாம்பு கரும்பு பயிரில் இரும்புச்சத்து பற்றாக்குறையால் இலைகள் மஞ்சள் நிறமாக மாறிவிடும். இதைக் கட்டுப்படுத்தாவிட்டால் பயிரின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மகசூல் குறையும். இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 4 கிலோ பெராஸ்சல்பேட், 2 கிலோ சிங்க் சல்பேட் இரண்டையும் முதல் நாள் இரவில் 10 லிட்டர் நீரில் ஊறவைத்து மறுநாள் காலையில் இதனுடன் 2 எலுமிச்சம் பழத்தை பிழிந்துவிட்டு 4 கிலோ யூரியாவையும் சேர்த்து கரைத்து வடிகட்டி 190 லிட்டர் தண்ணீரில் கைத்தெளிப்பான் கொண்டு காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்க வேண்டும். இந்த கரைசல் தெளித்து 1 வாரம் கழித்து மஞ்சள் மாறவில்லையெனில் 15 நாள்கள் கழித்து மற்றொரு முறை இதே கரைசலைத் தெளிக்க வேண்டும். மேற்கண்ட முறைகளில் மறுதாம்பு கரும்பு பராமரித்து அதிக மகசூல் எடுக்கலாம். இவ்வாறு தண்டராம்பட்டு வேளாண்மை உதவி இயக்குநர் அ.பாலா தெரிவித்துள்ளார்.

**சாத்தனூர் அணையிலிருந்து விவசாயத்துக்கு தண்ணீர் திறப்பு**

**தண்டராம்பட்டு,**

முதலமைச்சரின் உத்தரவுப்படி சாத்தனூர் அணை (பிக்கப்அணை) யிலிருந்து இடது மற்றும் வலது புற கால்வாய்கள் திறக்கும் நிகழ்ச்சி வியாழக்கிழமை நடைபெற்றது .

இக்கால்வாய்களின் மூலம் ஏரிகளுக்கு நாளொன்றுக்கு முறையே வினாடிக்கு 180 கன அடி மற்றும் 240 கன அடி வீதம் 6.2.2014 முதல் 1.3.2014 வரை (23 நாள்கள்) தண்ணீர் இக்கால்வாயில் செல்லும். திருக்கோயிலூர் அணைக்கட்டு பெண்ணையாறு பாசன பழைய ஆயக்கட்டு நிலங்களுக்கு உரிமை நீரினை முறையே வினாடிக்கு 800 மற்றும் 795 கன அடி வீதம் 6.2.2014 முதல் 8.2.2014 வரை இரண்டு நாள்களுக்கு நீர்வரத்து அதிகமாக திறந்து விடப்படும். இந்த நீரின் மூலம் திருவண்ணாமலை மாவட்டத்தில் 2210 ஏக்கர் பாசன நிலங்களும், விழுப்புரம் மாவட்டத்தில் 5908 ஏக்கர் பாசன நிலங்களும் பயன்பெறும்.

மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன், வருவாய் கோட்டாட்சியர் முத்துகுமாரசாமி,திருவண்ணாமலை (தெற்கு ) மாவட்ட அதிமுக செயலாளர் எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி,கீழ்பென்னாத்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் ஏ.கே.அரங்கநாதன், முன்னாள் அமைச்சர் எஸ்.ராமச்சந்திரன், செங்கம் சட்டப்பேரவை  உறுப்பினர் டி.சுரேஷ்குமார், தண்டராம்பட்டு ஒன்றியக் குழுத் தலைவர் டி.ஜானகிராமன், தண்டராம்பட்டு நில வங்கித் தலைவர் எஸ்.ஆர்.தருமலிங்கம், தண்டராம்பட்டு ஒன்றியச் செயலாளர் தேவராஜன், சாத்தனூர் அணை உதவி செயற்பொறியாளர் ஷாஜகான், சாத்தனூர் நீர்த் தேக்கத் திட்டக் குழுத் தலைவர் ஜெயராமன், தண்டராம்பட்டு வட்டாட்சியர் ஜெயராமன், சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் வெங்கடேசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பரிதிமால், வேல்முருகன் உள்பட வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சித்துறை  அலுவலர்கள் பங்கேற்றனர். உதவி பொறியாளர் ரமேஷ் நன்றி தெரிவித்தார்.

**ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி திட்ட பகுப்பாய்வு முகாம்**

**தருமபுரி,**

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் அருகே ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி திட்டத்தைச் செயல்படுத்துதல் குறித்த பகுப்பாய்வு முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

தருமபுரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம் பென்னாகரம், தருமபுரி வருவாய் வட்டங்களில் பிக்கிலி, வட்டுவனஅள்ளி, மாங்கரை, பருவதனஅள்ளி, கூத்தப்பாடி, வெள்ளாளப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட உள்ளது.

இந்த இரு வட்டங்களில் 10 நீர்வடிப் பகுதிகளின் நிலப்பரப்பு 4165 ஹெக்டேர் ஆகும். இதற்கான திட்ட மதிப்பு ரூ.499.80 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியில் மத்திய அரசு 90 சதம், மாநில அரசு 10 சதமும் அளித்துள்ளன. சுமார் 4 முதல் 7 ஆண்டுகளுக்கு மக்கள் பங்கேற்புடன் 11 தொகுதிகளாகத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இந்தத் திட்டத்தில், இயற்கை வளங்களான நிலம், நீர், தாவரங்களை பாதுகாத்து பராமரித்தல், நீர் வடிப்பகுதியில் வாழும் மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவது, பண்ணை உற்பத்தி, சிறுதொழில் மேம்பாட்டுக்கு உதவுவது, தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுதல், சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கி வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான மக்கள் பங்கேற்புடன் கூடிய ஊரக மதிப்பிடல் பகுப்பாய்வு முகாம் பென்னாகரம் வட்டத்தில் உள்ள பருவதனஅள்ளி ஊராட்சியில் நூலஅள்ளி கிராமத்தில் நடைபெற்றது.

முகாமுக்கு, திட்ட மேலாளர் கே.மோகன் தலைமை வகித்தார். இதில், காலநிலை வரைபடம், சமூக வரைபடம், இயற்கை வள வரைபடம் மூலமாக மக்களிடத்தில் கருத்துகள் கேட்கப்பட்டு, புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன. இதில், மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை அலுவலர்கள் பி.முருகேசன், வேளாண்மை துணை இயக்குநர் வி.எம்.பெருமாள், உதவி செயற் பொறியாளர் எம்.ஆர்.அசோகன், விரிவாக்க அலுவலர் கே.நாகராஜன், ஊராட்சி மன்றத் தலைவர் சி.அன்பழகன் மற்றும் நீர்வடிப் பகுதி வளர்ச்சி அணி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**தேங்காய் உரி மட்டைகளை எரிபொருளாகப் பயன்படுத்தினால் நடவடிக்கை நாமக்கல்,**

தேங்காய் உரி மட்டைகளை எரிபொருளாகப் பயன்படுத்தும் நிறுவனங்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று, நாமக்கல் மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி எச்சரிக்கை விடுத்தார்.

இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்டத்தில் கடந்த இரு ஆண்டுகளாகப் பருவ மழை போதுமான அளவு பெய்யாததால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு, தேங்காய் வரத்து குறைந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, தேங்காய் நார் தயாரிப்புக்கு மூலப்பொருளான தேங்காய் உரி மட்டைகளுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, குறைவாக இருக்கும் உரித்த மட்டைகளை நிறுவனங்கள் எரிபொருளாகப் பயன்படுத்துவதைக் கண்டறிந்து தடுத்திட நாமக்கல் மாவட்டத் தேங்காய் நார் உற்பத்தியாளர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஏற்கெனவே, தேங்காய் நார் தொழில்சாலைகளை பாதுகாக்கும் நோக்கத்தில் தேங்காய் உரி மட்டைகளை எரிபொருளாக நிறுவனங்கள் பயன்படுத்தக் கூடாது என தடை விதித்து, தமிழக அரசு 2007-ஆம் ஆண்டில் ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ஆணையில் கூறப்பட்டுள்ள உத்தரவுகளை அமல்படுத்துவதற்கான அலுவலராக மாவட்டத் தொழில் மைய பொதுமேலாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

எனவே, பற்றாக்குறையாக உள்ள தேங்காய் உரி மட்டைகளை நிறுவனங்கள் எரிபொருளாகப் பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு பயன்படுத்துவது கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீது அரசாணைப்படி சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பாக மேலும் விளக்கம், தகவல்கள் பெற மாவட்டத் தொழில் மைய மேலாளரைத் தொடர்பு கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"விவசாயத்தில் சவால்கள்: குரல்வழி குறுஞ்செய்திகள் உதவும்**

**புதுக்கோட்டை,**

விவசாயப் பணிகளில் உழவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை சமாளிக்க குரல்வழி குறுஞ்செய்தித் திட்டம் உதவிகரமாக இருக்கும் என்றார் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான்.

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில், புதுக்கோட்டை தமிழ்நாடு அறிவியல் இயக்க கூட்ட அரங்கில் வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் ஆர்.பி. ஞானமலர் தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற செல்போன் மூலம் குரல்வழி குறுஞ்செய்தி அனுப்பும் திட்டம் தொடக்க விழாவில் பங்கேற்று மேலும் அவர் பேசியது:

விவசாயிகள் தற்போது பல்வேறு சவால்களை சந்தித்து வரும் சூழ்நிலையில், அவற்றை சமாளிக்க பல்வேறு தகவல்களும், ஆலோசனைகளும் தேவைப்படுகிறது. அதை நிறைவு செய்யும் வகையில், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் குரல்வழி குறுஞ்செய்தி அனுப்பும் திட்டத்தை தொடங்கியிருப்பது பாராட்டுக்குரியது.

குரல்வழி செய்தி அனைத்து விவசாயிகளுக்கும் பயனுள்ளதாக அமையும். குரல்வழி செய்தி மூலம் அனுப்பப்படும் வானிலை தகவல்கள் மற்றும் ஆலோசனைகள், மண் மற்றும் பாசனநீர் பரிசோதனை, விதைகள் மற்றும் ரகங்கள் தேர்வு, நவீன தொழில்நுட்பத் தகவல்கள், பயிர் பாதுகாப்பு தகவல்கள், சந்தை நிலவரங்கள், அரசு நலத்திட்டங்கள், பயிர் மேலாண்மை போன்ற தகவல்கள் விவசாய உற்பத்தியை பெருக்க உதவியாய் அமையும்.

இந்த ஆராய்ச்சி நிறுவனம் தொடங்கியுள்ள விவசாய நண்பன் உதவி மையம் விவசாயிகளுக்கு அவ்வப்போது ஏற்படும் சந்தேகங்களை தீர்க்க உதவும். எனவே, விவசாயிகள் இத்திட்டத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர். ராஜ்குமார் பேசும்போது, இந்தத் திட்டத்தின் மூலம் தினமும் 2 குரல்வழி குறுஞ்செய்திகள் பதிவுசெய்த விவசாயிகளுக்கு அனுப்பப்படும். விவசாயிகளுக்கு

ஏற்படும் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்க விவசாய நண்பன் உதவி மையமும் செயல்படுகிறது. விவசாயிகள் 96777 59545, 96777 59549 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

இதில், முன்னோடி விவசாயிகள் ஜி.எஸ். தனபதி, கே.பி. முருகேசன், ச.வே. காமராசு, ரெ. ரவி ஆகியோர் வாழ்த்திப் பேசினர். இதில், மாவட்டம் முழுவதுமிருந்தும் 125 விவசாயிகள் பங்கேற்றனர்.முன்னதாக ஆராய்ச்சி மைய அலுவலர் எம். கலையரசி வரவேற்றார். தேசிய இணைய கல்விக் கழக பிரதிநிதி கே. பன்னீர்செல்வம் நன்றி கூறினார்.

**மயிலாடுதுறை விஜயா வங்கி மூலம் ரூ. 3.45 கோடி விவசாயக் கடன்**

**மயிலாடுதுறை,**

மயிலாடுதுறை விஜயா வங்கிக் கிளையில் 250 பயனாளிகளுக்கு ரூ. 3.45 கோடி விவசாயக் கடன் அண்மையில் வழங்கப்பட்டது.வங்கியில் நடைபெற்ற கடன் வழங்கும் முகாமுக்கு விஜயா வங்கியின் கோவை மண்டல முதன்மை மேலாளர் கே. ரெங்கராஜு தலைமை வகித்து, மயிலாடுதுறை, கும்பகோணம் இளந்தோப்பு ஆகிய வங்கிக் கிளைகள் மூலம் 250 பயனாளிகளுக்கு கடன் தொகையை வழங்கினார். பின்னர் அவர் பேசியது: 1932-ல் விவசாயிகளுக்காக தொடங்கப்பட்ட இவ்வங்கி 1504 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில், கரும்புக் கடன் மற்றும் பயிர்க் கடன் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் கடனை திருப்பிச் செலுத்தி, மேலும் பயனடைய வேண்டும் என்றார் ரெங்கராஜு.இதில் வங்கிக் கிளை மேலாளர்கள் ஜி. கிருஷ்ணன் (மயிலாடுதுறை), ரவிச்சந்திரன் (கும்பகோணம்), ஜெசிந்த் ஷெரின், மல்லிகா (இளந்தோப்பு) மற்றும் வங்கி அலுவலர்கள், ஆரூரான் சுகர்ஸ் நிறுவன அதிகாரிகள், பயனாளிகள் பங்கேற்றனர்.

**396 பயனாளிகளுக்கு ரூ. 7.70 கோடி கடனுதவி**

**பெரம்பலூர்,**

பெரம்பலூரில் விவசாயம் மற்றும் முன்னுரிமைக் கடன்கள் வழங்கும் முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் தஞ்சை மண்டலத்தின் சார்பில் வங்கி நிறுவனர் நாளையொட்டி நடைபெற்ற இம்முகாமுக்கு தஞ்சை மண்டல முதன்மை மேலாளர் எஸ். ராஜேந்திரன் தலைமை வகித்துப் பேசியது:

பெரம்பலூர் மாவட்டத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் அனைத்துக்கிளை மேலாளர்களும் விவசாயிகள், கல்வியாளர்கள், பொதுநிலையினர் என அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் முன்னுரிமைக் கடன் வழங்க வேண்டும் என்றார்.

பயனாளிகளுக்கு முன்னுரிமைக்கான கடனுதவிக்கான காசோலைகள் வழங்கி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொது மேலாளர் ஆர்.கே. குப்தா பேசியது:

சிதம்பரம் என்பவர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியை கடந்த 78 ஆண்டுகளுக்கு முன், 3 வெளிநாட்டுக் கிளைகளுடன் தொடங்கினார்.

தற்போது, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 17 கிளைகள் உள்பட, தஞ்சை மண்டலத்தில் 74 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயம் மற்றும் முன்னுரிமைக் கடன் அதிகம் வழங்குவதில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி பெருமை கொள்கிறது.

இதை, ஒரு பணியாக செய்யாமல் சமூக அக்கறையோடு செய்து வருகிறது. மகளிருக்கு தன்னம்பிக்கை ஏற்படுத்தும் வகையில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அதிகப்படியான கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

பயனாளிகள் வாங்கும் வங்கிக் கடன் தொகையை முறையாக பயன்படுத்தி, வங்கிக்குத் திருப்பிச் செலுத்தினால் வாழ்வில் முன்னேற்றம் அடைவார்கள். அவர்களது சேமிப்புத் தொகையும் அதிகரிப்பதோடு, மற்றவர்களும் பயன்பெறுவார்கள் என்றார் அவர்.

தொடர்ந்து, 251 விவசாயிகளுக்கு ரூ. 4.47 கோடி மதிப்பிலும், 84 சிறு, குறு தொழில் முனைவோர்களுக்கு ரூ. 1.93 கோடி மதிப்பிலும், இதர வணிக கடன்களாக 31 நபர்களுக்கு ரூ. 1.30 கோடி மதிப்பிலும் என, 396 பயனாளிகளுக்கு ரூ. 7.70 கோடி மதிப்பில் கடன் தொகைகள் வழங்கப்பட்டன.

விழாவில், முதன்மை மேலாளர் சி. சந்திரசேகர், உதவி பொதுச் செயலர்கள் மோகனசுந்தரம், சத்தியசீலன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சந்திரசேகரன், ஐ.ஓ.பி கிராமிய சுய வேலைவாய்ப்புப் பயிற்சி மைய இயக்குநர் ஜி. பார்த்தசாரதி உள்பட பலர் பங்கேற்றனர்.

தஞ்சை முதன்மை மேலாளர் ராஜா ருக்மாங்கதன் வரவேற்றார். பெரம்பலூர் கிளை முதன்மை மேலாளர் ஆதிமூலம் நன்றி கூறினார்.

**நீர்வரத்து குறைவு: வறண்டன வடக்குப்பச்சையாறு, கொடுமுடியாறு அணைகள் திருநெல்வேலி,**

திருநெல்வேலி மாவட்டத்தில் அணைகளுக்கு நீர்வரத்து குறைந்ததால் வடக்குபச்சையாறு, கொடுமுடியாறு அணைகள் வறண்டன.

வியாழக்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 37.38 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 21 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

தாமிரவருணி பாசனத்தில் நிகழ் பிசான சாகுபடிக்கு பாபநாசம் அணையின் மூலம் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் பாசனம் பெறும் 86,107 ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதேபோல கடனாநதி, ராமநதி, கருப்பாநதி, அடவிநயினார் ஆகிய 4 அணைகள் மூலம் பாசனம் பெறும் 32,000 ஏக்கர் ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் திறக்கப் பட்டுள்ளது.

நிகழ் பருவத்தில் வடகிழக்கு பருவ மழை 2013- ம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கிய போதிலும் வழக்கத்தை விட 12.6 சதவிகிதம் குறைவாக மழை பெய்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இதனால் இம் மாவட்டத்தில் உள்ள பிரதான அணைகளான பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகள் முழு கொள்ளளவை எட்டவில்லை. பிரதான அணைகளின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வந்த நிலையில் கடந்த ஜனவரியில் மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்பிடிப்புப் பகுதியில் பெய்த பலத்த மழையால் பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளின் நீர்மட்டம் கணிசமாக அதிகரித்தது.

நீர்வரத்து இல்லை: இதனிடையே நீர்பிடிப்புப் பகுதியில் இருந்து அணைகளுக்கு நீர்வரத்து குறைந்து காணப்படுகிறது. வியாழக்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 37.38 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 21 கனஅடியும், கடனாநதி அணைக்கு 12.31 கனஅடியும், ராமநதி அணைக்கு 9.72 கனஅடியும், கருப்பாநதி அணைக்கு 5 கனஅடியும், அடவிநயினார் அணைக்கு 3 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

அணைகள் வறண்டன: அணைகளுக்கு நீர்வரத்து இல்லாததால் 50 அடி கொள்ளளவு கொண்ட வடக்குபச்சையாறு அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை 0 அடியாக இருந்தது. 52.50 அடி கொள்ள்ளவு கொண்ட கொடுமுடியாறு அணையின் நீர்மட்டம் 2 அடியாக இருந்தது. கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 24.76 அடியாக இருந்தது.

அணைகளின் நீர்மட்டம்: பாபநாசம் அணையின் நீர்மட்டம் 74.70 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 71.88 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 82.05 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 45.60 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 41.00 அடியாகவும் இருந்தது.

1250 கனஅடி திறப்பு: பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்காக பாபநாசம் அணையில் இருந்து 1154.75 கனஅடியும், மணிமுத்தாறு அணையில் இருந்து 140 கனஅடியும், கடனாநதி அணையில் இருந்து 45 கனஅடியும், ராமநதி அணையில் இருந்து 25 கனஅடியும், அடவிநயினார் அணையில் 20 கனஅடியும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இம்மாவட்டத்தில் உள்ள அணைகளுக்கு நீர்வரத்து இல்லாததால் அணைகளின் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது.

**விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்கள்**

**கள்ளக்குறிச்சி,**

தியாகதுருகத்தில் வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்கள் வழங்கும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

வேளாண் அலுவலகம் முன் நடைபெற்ற இவ்விழாவுக்கு ஒன்றியக்குழுத் தலைவர் வை.பச்சையம்மாள் தலைமை வகித்தார். துணைத் தலைவர் அ.தைலம்மாள், வட்டார வளர்ச்சி அலுவலர் சி.கலைச்செல்வி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அட்மா திட்டத்தின் கீழ் 20 விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் இடு பொருள்களை வேளாண் துணை இயக்குநர் (மத்திய திட்டம்) அ.ரத்தினசபாபதி, வேளாண்மை துணை இயக்குநர் பி.ராஜமணி (அட்மா திட்டம்) ஆகியோர் வழங்கினர்.

நிகழ்ச்சியில் விவசாயிகள் உட்காருவதற்கு எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை. அவர்கள் நின்றிருந்தவாரே பொருள்களை பெற்றுச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜே.ஜெயசுதா, பொருள் சிறப்பு அறிஞர்கள் மு.சுந்தர், சி.அறிவழகு முருகன், வேளாண்மை அலுவலர் இரா.கிருஷ்ணகுமாரி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**5,500 தேயிலை தொழிலாளர்களுக்கு "ரெயின் கோட்!"**



**ஊட்டி:** தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழக (டான் டீ), தொழிலாளர்கள், 5,500 பேருக்கு, மழையில் நனையாமல் இருக்க, "ரெயின் கோட்' வழங்கப்பட்டன. நீலகிரி மாவட்டம், குன்னூரை தலைமையிடமாக கொண்டு செயல்படும், தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தில் (டான் டீ), அலுவலர்கள், பணியாளர்கள், தோட்ட தொழிலாளர்கள் என, 5,500 பேர் பணிபுரிகின்றனர். அவர்களுக்கு, தமிழக அரசின் சார்பில், 17 லட்சம் ரூபாய் மதிப்பில், "ரெயின் கோட்' மற்றும் பாதுகாப்பு ஆடைகள், 24 தற்காலிக ஊழியர்களுக்கு, பணி நியமன ஆணை ஆகியவற்றை வழங்கும் நிகழ்ச்சி, குன்னூர், "டான் டீ' அலுவலகத்தில், நேற்று நடந்தது.

மாநில வன துறை அமைச்சர் ஆனந்தன் பேசியதாவது: கடந்த, தி.மு.க., ஆட்சியில், "டான் டீ' நிர்வாகம், 16 கோடி ரூபாய், நஷ்டத்தில் இயங்கி வந்தது; தற்போது, 4.03 கோடி ரூபாய், லாபத்தில் செயல்படுகிறது. "டான் டீ' தொழிற்சாலைகளுக்கு, 4 கோடி ரூபாய் செலவில், 22 புதிய இயந்திரங்கள் வாங்கப்பட உள்ளன. 1.10 கோடி ரூபாய் மதிப்பில், "டான் டீ' தொழிலாளர் குடியிருப்புகளில், கழிப்பறை, நடைபாதை உட்பட, பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. "டான் டீ' நிர்வாகத்தில் உள்ள, எட்டு கோட்டங்களில், அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த, 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது; ஊழியர்களுக்கு, 20 சதவீதம், போனஸ் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

60 நாள் பணி செய்தால் நிரந்தரம்.... : "டான் டீ' நிர்வாகத்தின் கீழ், குன்னூர், கூடலூர், நடுவட்டம், கூடலூர், வால்பாறை உட்பட இடங்களில், தேயிலை தோட்டம் மற்றும் தொழிற்சாலைகள் உள்ளன. இங்கு, 480 நாள், பணிபுரியும் தொழிலாளர்கள், பணி நிரந்தரம் செய்யப்படுகின்றனர். "வால்பாறை, நடுவட்டம் பகுதியில், தோட்ட தொழிலுக்கு ஆட்கள் கிடைக்காததால், 60 நாள் தற்காலிகமாக பணிபுரிந்தால், அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுகின்றனர் என, நிகழ்ச்சியில்

தெரிவிக்கப்பட்டது.

### துவங்கியாச்சு கோடை : எலுமிச்சை விலை உயர்வு

**ஒட்டன்சத்திரம்:** ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் எலுமிச்சை விலை, கிலோவிற்கு ரூ.10 வரை அதிகரித்து ரூ.30 க்கு விற்றது. ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டிற்கு, உள்ளூர் பகுதி மற்றும் மணப்பாறையில் இருந்து எலுமிச்சை, விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. கோடை காலம் துவங்கும் முன்பே, வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், எலுமிச்சை விற்பனை சூடுபிடித்துள்ளது. இங்கு வரும் எலுமிச்சைகளை, கேரள வியாபாரிகள் அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர். சென்ற வாரம், கிலோ ரூ.20 முதல் ரூ.25 வரை விற்ற எலுமிச்சை, நேற்று ரூ.30 முதல் ரூ.40 வரை விற்றது. எலுமிச்சை கடை உரிமையாளர் நடராஜ் கூறுகையில், "கடந்த ஆண்டு, எலுமிச்சை அதிகபட்சமாக, கிலோ ரூ.80 க்கு விற்றது. மழை பொய்த்துப் போனதால், இந்த ஆண்டு மேலும் விலை அதிகரிக்கும், என்றார்.

### குளம், குட்டைக்கு தண்ணீர் கொண்டு வர ஆய்வு அறிக்கை தயாரிப்பு: ஆலோசிக்கும் அதிகாரிகள்

**திருப்பூர் :** வரும் கோடையை சமாளிக்க, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள குளங்களுக்கு தண்ணீர் கொண்டு வருவது தொடர்பாக, ஆய்வு பணி மற்றும் கருத்துரு தயாரிக்கும் வேலைகள் நடந்து வருகின்றன.

திருப்பூர் மாவட்டத்தில், கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ மழை ஏமாற்றி விட்டது. மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு, 602.45 மி.மீ., 2012ல், 365.26 மி.மீ., மட்டுமே பெய்தது. 2013ல், மேலும் குறைந்து 305.02 மி.மீ., மட்டுமே பெய்தது. நடப்பாண்டும், ஜன., - பிப்., மாத குளிர் கால மழையும் துவங்கவில்லை. கடந்த இரு ஆண்டுகளாக தொடர்ந்து மழை குறைந்ததால், கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது; நிலத்தடி நீர் மட்டமும் சரிந்துள்ளது. இந்தாண்டு கோடை காலத்தை சமாளிப்பது மிக பெரிய பிரச்னையாக மாறியுள்ளது. குடிநீர் தட்டுப்பாடு, கால்

நடைகளுக்கு குடிநீர் வழங்குவது சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.
போர்வெல்களில் தண்ணீர் குறைந்தால், பொது மற்றும் குடிநீர் பயன்
பாடும், கால்நடைகளுக்கு குடிநீர் தட்டுப்
பாடும் ஏற்படும் அபாயம் உள்ளது. விவசாய நிலங்களில் உள்ள தென்னை
உள்ளிட்ட நிலைப்பயிர்களும் கருகும் வாய்ப்புள்ளது.
நிலத்தடி நீர் மட்டத்துக்கு உதவும் வகையில், நம் மாவட்டத்தில் 256 குளம், குட்டைகள் உள்ளன. இவற்றுக்கு, பி.ஏ.பி., மற்றும் அமராவதி அணைகளில் இருந்து குளங்களுக்கு தண்ணீர் கொண்டு வந்து, சேமிக்க சாத்தியக்கூறு உள்ளதா என மாவட்ட நிர்வாகம், குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித்துறை ஆய்வு செய்து வருகிறது. குறைந்த பட்சமாக 120 குளங்களில் தண்ணீர் தேக்கினால் மட்டுமே, வரும் கோடையை சமாளிக்கமுடியும் என மாவட்ட நிர்வாகம் கருதுகிறது.
பொதுப்பணித்துறை, குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் கூறியதாவது:
கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ மழை ஏமாற்றியதால், கடும் வறட்சி நிலை ஏற்பட்டுள் ளது. நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக பாதித்துள்ளது. நிலத்தடி நீர்மட்டத்தை ஆதாரமாக கொண்ட குடிநீர் திட்டங்கள் மற்றும் கால் நடைகளுக்கு பாதிப்பு ஏற்படும். கோடையை சமாளிப்பதற்கான வழிமுறை ஆய்வு செய்யப்படுகிறது. அதில், குளம், குட்டைகளுக்கு தண்ணீர் திறந்து விட்டு, சேமிப்பது குறித்து கணக்கெடுக்கப்பட்டுள்ளது.
கடந்த காலங்களில் இதுபோல், பாசன திட்ட அணைகளில் இருந்து குளங்களுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. மேலும், செயல்படுத்தப்படும் குடிநீர் திட்டங்கள் மூலம் கூடுதல் குடிநீர் வழங்குவது குறித்து மாவட்ட நிர்வாகம் கேட்டதன் அடிப்படையில், கருத்துரு தயாரிக்கப்பட்டுள்ளது. அரசு அனுமதி பெற்று அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும், என்றனர்.

**கடலூர் மாவட்டத்தில் 4 இடங்களில் தீவனக் கிடங்கு: அமைச்சர் சம்பத்**



**கடலூர்**:""கால்நடைகளின் பராமரிப்பு பசியை போக்கிட கடலூர் மாவட்டத்தில் 4 இடங்களில் தீவனக் கிடங்கு அமைக்கப்படும்" என அமைச்சர் சம்பத் பேசினார்.கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் உலர் தீவன விற்பனை மையம் துவக்க விழா நேற்று கடலூரில் நடந்தது. கலெக்டர் கிர்லோஷ்குமார் தலைமை தாங்கினார். இணை இயக்குனர் மதிவாணன் முன்னிலை வகித்தார்.அமைச்சர் சம்பத் உலர் தீவின விற்பனை மையத்தை துவக்கி வைத்து பேசியதாவது:மாநிலம் முழுமைக்கும் கால்நடைகளின் பசியைப்போக்கிட 125 உலர் தீவனப்பயிர் கிடங்குகள் 12.5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ளது. அதில் கடலூர் மாவட்டத்தில் 40 லட்சம் ரூபாயில் தலா 10 லட்சம் மதிப்பில் கடலூர், பு.முட்லூர், விருத்தாசலம், தொழுதூர் ஆகிய நான்கு இடங்களில் தொடங்கப்படவுள்ளது. தீவனக்கிடங்கு தொடங்கப்பட்ட நாளில் இருந்து 60 முதல் 90 நாட்கள் முடிய இயங்க உள்ளது.

வெளிச்சந்தையில் 5 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை வாங்கப்படும் வைக்கோலை இக்கிடங்குகள் மூலம் ஒரு கிலோவுக்கு 2 ரூபாய்க்கு கால்நடைகள் வைத்திருக்கும் ஏழை விவசாயிகளுக்கு விற்கப்பட உள்ளது. இதை பெறுவதற்காக கால்நடை வைத்திருப்போருக்கு அடையாள அட்டை வழங்கப்படும். கால்நடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப (அதிகபட்சமாக 5) கால்நடை ஒன்றுக்கு 3 கிலோ வீதம் தீவனம் வழங்கப்படும்.இதனை நாள்தோறுமோ அல்லது ஒரு வாரத்திற்கு தேவையானதையோ கால்நடை உரிமையாளர்கள் பெற்றுக்

கொள்ளலாம்.இவ்வாறு சம்பத் பேசினார்.கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குனர் கணேசன் நன்றி கூறினார்.

### உரக்குடிலில் ஆய்வு

**ராமநாதபுரம்:** சோழந்தூரில் "அட்மா' திட்ட உளுந்து செயல்விளக்க திடல், தேசிய வேளாண் வளர்ச்சி திட்ட மானிய உரக்குடிலை, ராமநாதபுரம் வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி ஆய்வு செய்தார். விதை ஆய்வு துணை இயக்குனர் மணிமாறன், உதவி இயக்குனர் ராஜாராம், அலுவலர் உலகுசுந்தரம், துணை அலுவலர் தனதுரை, உதவி அலுவலர் நாகேஸ்வரி உடன் சென்றனர்.

### ரூ.1.50 லட்சத்திற்கு மாம்பழம் ஏலம்

**நாகர்கோவில் :** கன்னியாகுமரி தோட்டக்கலை துறைக்கு சொந்தமான அரசு பழத்தோட்டம் உள்ளது. இந்த பழத்தோட்டம் 1922-ம் ஆண்டு ஸ்ரீமூலம் மகாராஜாவால் தொடங்கப்பட்டது. மொத்தம் 31.64 ஏக்கர் பரப்பளவு கொண்டது இந்த பழத்தோட்டம். இங்கு 400-க்கும் மேற்பட்ட மாமரங்கள் உள்ளன. இதில் தற்போது ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதத்திற்கான இடை பருவ சீசனில் நீலம், பங்கனபள்ளி, ஷிமாயுதீன், பொங்களூரா, களப்பாடு உள்பட பலவகையான ரகங்களை கொண்ட 112 மாமரங்களில் மாங்காய்கள் காய்த்து உள்ளன. இந்த மாங்காய்கள் தனியாருக்கு ஏலம் விடும் நிகழ்ச்சி கன்னியாகுமரி அரசு பழத்தோட்டத்தில் நடைபெற்றது. தோட்ட கலை துறை துணை இயக்குநர் சிவகுமார், உதவி இயக்குநர் அசோக் மேக்கரின், கன்னியாகுமரி அரசு தோட்டக்கலை பண்ணை மேலாளர் குமரேசன் ஆகியோர் முன்னிலையில் இந்த ஏலம் விடப்பட்டது. இந்த மாங்காய்கள் ரூ1 லட்சத்து 88 ஆயிரத்து 888-க்கு ஏலம் போனது. இந்த ஏலத்தை அகஸ்தீஸ்வரத்தை சேர்ந்த சீனிவாசன் என்பவர் எடுத்துள்ளார்.

## பொள்ளாச்சி மாட்டுச்சந்தைக்கு வரத்து குறைவு: 800 மாடுகள் வருகை

**பொள்ளாச்சி :** பொள்ளாச்சி மாட்டுச்சந்தைக்கு மாடுகள் வரத்து குறைவாக காணப்பட்டது. நேற்று 800 மாடுகள் மட்டுமே இருந்தது.

தமிழகத்தில் பொள்ளாச்சி மாட்டுச்சந்தை மிகவும் சிறப்பு வாய்ந்தது. வாரம்தோறும் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் மாட்டுச்சந்தை கூடுகிறது. வெளி மாநிலங்கள்; தஞ்சாவூர், கும்பகோணம், ஒட்டன்சத்திரம், ஈரோடு, திருப்பூர், சேலம், திருவண்ணாமலை,விழுப்புரம், திண்டிவனம் உள்ளிட்ட வெளி நகரங்களில் இருந்து பல்வேறு ரகங்களை சேர்ந்த மாடுகள் விற்பனைக்கு வருகின்றன.

மாட்டுச்சந்தையில் செவ்வாய்கிழமையில் நான்காயிரத்துக்கு மேற்பட்ட மாடுகள்; வியாழக் கிழமைகளில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாடுகளும் விற்பனைக்கு வருகின்றன. பொள்ளாச்சி சந்தையில் இருந்து பெரும்பாலும் கேரளாவிற்கு மாடுகள், வளர்ப்பு மற்றும் இறைச்சிக்காக கொண்டு செல்லப்படுகின்றன.

இந்நிலையில், வழக்கம் போல மாட்டுச்சந்தை நேற்று நடந்தது. இதில், மாடுகளின் வரத்து குறைந்திருந்தது.

மாட்டு வியபாரிகள் கூறுகையில்,"பொள்ளாச்சியில், மாட்டுச்சந்தைக்கு 800 மாடுகள் மட்டுமே நேற்று வரத்தாக இருந்தது. தற்போது, வழக்கத்தை விட குறைவாகவே உள்ளது. தமிழகத்தில் நிலவும் கடும் வறட்சி காரணமாகவும்; கேரளாவில் மாடுகள் அறுவை நிலையங்களுக்கு நோட்டீசு அனுப்பப்பட்டதாலும் வியாபாரிகள் மாடுகளை கொண்டு வரவில்லை. இதனால், மாடுகள் வரத்து குறைந்தது. விலையும் குறைந்திருந்ததால், மாட்டு வியாபாரிகள் பாதிக்கப்பட்டனர்," என்றனர்.

· மாட்டுச்சந்தையில் செவ்வாய்கிழமையில் நான்காயிரத்துக்கு மேற்பட்ட மாடுகள்; வியாழக்கிழமைகளில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாடுகளும் விற்பனைக்கு வருகின்றன. பொள்ளாச்சி சந்தையில் இருந்து பெரும்பாலும் கேரளாவிற்கு மாடுகள், வளர்ப்பு மற்றும் இறைச்சிக்காக கொண்டு செல்லப்படுகின்றன.

## துவரை சாகுபடியில் புதிய தொழில்நுட்பம்

**பெ.நா.பாளையம் :** வேளாண் துறை சார்பில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில், விவசாயிகளுக்கு பல்வேறு மானியங்கள் வழங்கப்படுகின்றன.துவரை சாகுபடியில் புதிய தொழில்நுட்பமான நாற்று நடவு சாகுபடி முறையை விவசாயிகளிடம் பிரபலபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. துவரை நடவு முறை சாகுபடி செயல்விளக்கத்திடல் அமைக்க, ஒரு எக்டருக்கு 7,500 ரூபாய் வீதம் 30 எக்டருக்கு 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், துவரை நடவுமுறை சாகுபடி செலவு ஊக்கத்தொகையாக எக்டருக்கு 7500 வீதம் 95 எக்டருக்கு மானியம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. துவரை நடவுமுறை சாகுபடி தொழில்நுட்பம் குறித்து வட்டாரத்தில் 120 விவசாயிகளுக்கு 4 அணிகளாக பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிறு பெருக்கு திட்டத்தில், விவசாயிகளுக்கு விதை உற்பத்தி மானியமாக கிலோவுக்கு 15 ரூபாய் வீதம் 4,000 கிலோவுக்கு மானியம் வழங்கப்பட உள்ளது. மண் வளம் அதிகரிக்கும் நோக்கத்தில் நீர் ஆதார இடத்திலிருந்து, பாசன இடத்துக்கு நீர் கொண்டு செல்ல, எக்டருக்கு 15 ஆயிரம் ரூபாய் மானிய விலையில் பைப் லைன்கள், இரண்டு எக்டருக்கு வழங்கப்பட உள்ளது. கரும்பு பெருக்கு திட்டத்தில், நீடித்த நிலையான கரும்பு சாகுபடி செய்ய எக்டருக்கு 30 ஆயிரம் ரூபாய் மானியத்தில் 5 எக்டருக்கு இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டங்களில் விவசாயிகள் பயன்பெற விவசாயிகள் தங்கள் பெயர், முகவரி, மற்றும் இதர விபரங்களை வேளாண் துறையில் பதிவு செய்து, ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு பெற்று அனைத்து திட்ட மானியங்களையும் பெறலாம்.இத்தகவலை, பெரியநாயக்கன்பாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ஷபி அகமது தெரிவித்தார்.

## மானிய விலையில் வைக்கோல் விற்பனை

**சூலுார் :** கால்நடைகளுக்கு மானிய விலையில், உலர் தீவனம் விற்பனை செய்யும் வறட்சி நிவாரணத் திட்டம், சூலுாரில் நேற்று துவங்கியது. கடந்த சில ஆண்டுகளாக பருவமழை சரியாக பெய்யாத காரணத்தால், பெரும்பாலான

மாவட்டங்களில் வறட்சி நிலவுகிறது. கால்நடைகளுக்கு போதுமான அளவு தீவனம் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டது. கோடைக் காலத்தில் தீவன தேவை அதிகரிக்கும் என்ற நிலை உருவாகியுள்ளது. விவசாயிகள் மானிய விலையில் தீவனங்கள் வழங்க கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து, தமிழக அரசு மானிய விலையில் வைக்கோல் விற்பனை செய்யும் திட்டத்தை அறிவித்தது. சூலூர் மற்றும் சுல்தான்பேட்டையில் உள்ள கால்நடை மருத்துவ மனைகளில் உலர்தீவன விற்பனை மையங்கள் துவக்கப்பட்டன. இங்கு, கால்நடை வளர்க்கும் விவசாயிகள், தங்கள் ரேஷன் கார்டு நகல் மற்றும் புகைப்படத்தை கொடுத்து பதிவு செய்து, தீவன வினியோக அட்டை பெற அறிவுறுத்தப்பட்டிருந்தனர். சூலூர் ஒன்றிய சேர்மன் பாலசுந்தரம், பதிவு செய்த விவசாயிகளுக்கு நேற்று உலர் தீவனத்தை வழங்கி பேசினார். மைய பொறுப்பாளர் கால்நடை மருத்துவர் பாஸ்கர் கூறுகையில், 'ஒரு கால்நடைக்கு, நாள் ஒன்றுக்கு 3 கிலோ வீதம், கிலோ ரூ. 2 விலையில் வைக்கோல் ஏழு நாட்களுக்கு வழங்கப்படும். இதுவரை பதிவு செய்யாத விவசசாயிகள், பதிவு செய்து அட்டைகளை பெற்று பயன்பெற, உலர் தீவன விற்பனை மையத்தை அணுகலாம்,' என்றார்.

## பஞ்சு விலை உயர்வு நூல் விலையில் பிரதிபலிப்பு

**கோவை :** பஞ்சு விலை உயர்வு நூல் விலையில் பிரதிபலிப்பதாக தென்னிந்திய மில்கள் சங்கம் தெரிவித்துள்ளது. 'சைமா' தலைவர் ராஜ்குமார் அறிக்கை: கடந்த ஐந்தாண்டுகளாக, அளவுக்கு அதிகமாக பஞ்சு வாங்கி பதுக்கி வைத்தல், அதிக ஏற்றுமதி உள்ளிட்ட காரணங்களால் பஞ்சு விலை உயர்ந்து வருகிறது. பஞ்சு நடப்பு மூலதன திட்டத்தை அறிவித்தால் மட்டுமே விலை ஏற்றத்தை கட்டுப்படுத்தவும், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவும் வழி வகுக்கும். நூல் விலையில் கடந்த இரண்டாண்டுகள் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள், நூல் தயாரிப்பதற்கு ஆகும் செலவினங்களை பொறுத்தே அமைகிறது. செப்., 2013ல், 355 கிலோ கொண்ட பஞ்சு கண்டி ஒன்று 47 ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. டிசம்பரில் 39 ஆயிரம் ரூபாயாக இருந்தது. தற்போது மீண்டும்

பஞ்சு விலை கண்டி 43 ஆயிரம் ரூபாயாக உயர்ந்துள்ளது. இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பண்ணையாளர்கள் விளக்கம் தமிழகத்தில் பறவைக்காய்ச்சல் பாதிப்பில்லை**

**நாமக்கல்:** "சீனாவில் பறவைக்காய்ச்சல் நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது போல், தமிழகத்தில் எவ்வித பாதிப்பும் இல்லை' என, பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.சீனாவின் கிழக்கு மாகாணமான ஷாங்காயில், கோழிகளுக்கு பறவை காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியானது. இந்தியாவிலும், குறிப்பாக மேற்கு வங்க மாநிலத்தில், சில ஆண்டுகளுக்கு முன் பறவை காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டு, லட்சக்கணக்கான கோழிகள் மற்றும் வாத்துகள் அழிந்தன.இந்தியாவில் உள்ள, 24 முட்டை மண்டலங்கள் மூலமாக, பறவை காய்ச்சல் உள்ளிட்ட பாதிப்புகளுக்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கையும் எடுத்து வருகின்றனர்.தமிழகத்தின், நாமக்கல் முட்டை மண்டலத்தில் மட்டும், 3.5 கோடி முட்டை கோழிகளில் இருந்து, தினமும், 3 கோடி முட்டைகளும், கறிக்கோழி எனப்படும் பிராய்லர் கோழி வளர்க்கப்படும், 12,000க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகளில் இருந்து, மாதம் தோறும், ஐந்து கோடி கிலோ கோழி உற்பத்தி செய்யப்படுகிறது. இந்நிலையில், தமிழகத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என, பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.""சீனாவில் பறவை காய்ச்சல் பாதிப்பு உள்ளதாக தகவல் வருகிறது. ஆனால், இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் எவ்வித பாதிப்பும் இல்லை. அதனால், பண்ணையாளர்கள் பீதியடைய வேண்டியதில்லை. தேவையான தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை ஆலோசனை பண்ணையாளருக்கு வழங்கப்படுகிறது," என, தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்க தலைவர் நல்லதம்பி தெரிவித்தார்.

**பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டம் தனியார் மயம் : தொய்வை சரிசெய்ய திடீர் நடவடிக்கை**

**ஊட்டி :**பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டத்தில், ஏற்பட்டுள்ள தொய்வை சரி செய்ய, தனியார்மயம் புகுத்தப்பட்டுள்ளது. மாநில அரசின், பெருநகர காய்கறி

தொகுப்பு வளர்ச்சி திட்டத்தின் கீழ், நீலகிரியில் விளையும் காய்கறிகளை கோவை உட்பட சமவெளி பிரசேதங்களில் விற்பனை செய்யும் வகையில், "பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டம்' துவக்கப்பட்டது. அதன்படி, அணிக்கொரை, கோத்தகிரியில், காய்கறி சேமிப்பு கிடங்குகள் அமைக்கப்பட்டன. இதன்படி வர்த்தகர்களே, சேமிப்பு கிடங்குக்கு சென்று, விவசாயிகள் வழங்கும் காய்கறிகளை வாங்கி, வாகனங்களில் எடுத்துச் செல்லும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இருப்பினும், இத்திட்டத்தை செயல்படுவதில் சில சிக்கல்கள் ஏற்பட்டன. விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு கோவைக்கு எடுத்து செல்லப்படும் காய்கறிகளில், பாதியளவு விற்பனையாகாமல் தேங்கியதால் நஷ்டம் ஏற்படுகிறது என்ற புகார் எழுந்தது.

புதிய முயற்சி இப்பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில், சந்தை ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் அறிமுக, ஆலோசனைக் கூட்டம், ஊட்டி சேரிங்கிராஸ் தோட்டக்கலை வணிக வளாகத்தில், நேற்று நடந்தது. தோட்டக்கலை இணை இயக்குனர் மணி வரவேற்றார்.

மாவட்ட கலெக்டர் சங்கர் தலைமை வகித்து பேசுகையில்,""சந்தை ஒருங்கிணைப்பாளர்கள் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக காய்கறிகளை வாங்கி,சந்தைக்கு கொண்டு செல்லும் பணியை மேற்கொள்வர். இதன் மூலம் இடைத்தரகர்களின்தலையீடு இருக்காது; காய்கறிகள் தேக்கமடைவது தவிர்க்கப்படும்.விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும். கிராமங்களில் சேமிப்பு கிடங்கு அமைக்க, அங்கிருந்த கோவைக்கு காய்கறிகளை கொண்டு செல்வதற்குரிய வாகனம் வாங்க, கோவையில் விற்பனை மையம் அமைக்க, மானியம் வழங்கப்படுகிறது; இதை பயன்படுத்தி கொள்ள வேண்டும்," என்றார்.

சந்தை ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள விஜயராகவன், பாலகிருஷ்ணன் பேசினர்.

ஏன் தனியார் மயம்?

காய்கறி விவசாயிகள் நேரடியாக இத்திட்டத்தில் இணைத்து, பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் தான், இத்திட்டம் நடைமுறைக்கு வந்தது. ஆனால், காய்கறிகளை சந்தைப்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கலால், தனியார்கள், "சந்தை

ஒருங்கிணைப்பாளர்' என்ற பெயரில், இத்திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கூட்டத்தில், தாம்பட்டி விவசாயி சண்முகம் பேசுகையில்,""இத்திட்டத்தில் தனியாரை நுழைப்பதன் காரணம் என்ன? விவசாயிகளை ஈடுபடுத்தலாமே" என்றார். ""சந்தை ஒருங்கிணைப்புப் பணியை செய்ய, விவசாயிகள் முன்வராததால் தான், தனியாரை நாட வேண்டியிருந்தது. இப்பணியில் தனிப்பட்ட விவசாயி, விவசாய குழுக்களும் ஈடுபடலாம்," என கலெக்டர் சங்கர் கூறினார்.

### தேயிலை சேவை மைய திட்டத்தால் சிறு விவசாய சங்கங்களுக்கு பயன்

**ஊட்டி :**நீலகிரி மாவட்டத்தில், சிறு விவசாய சங்கங்களுக்கு, முதன் முறையாக "தேயிலை சேவை மையம்' அமைக்கும் திட்டம் அமலுக்கு வந்துள்ளது.
தேசிய சிறு தேயிலை விவசாயிகள் கூட்டமைப்பு மற்றும் தென்னிந்திய தேயிலை விவசாயிகள் சங்கம் இணைந்து, ஊட்டியில் கருத்தரங்கை நடத்தின.
இந்திய தேயிலை வாரிய உறுப்பினர் டாக்டர் ராமு தலைமை வகித்தார்.
தென்னிந்திய தேயிலை சிறு விவசாயிகள் சங்க தலைவர் விசுவநாதன் முன்னிலை வகித்தார்.
கூட்டத்தில், முன்வைக்கப்பட்ட கருத்துக்கள்;
நீலகிரி மாவட்டத்தில், சிறு தேயிலை விவசாயிகளை உள்ளடக்கிய விவசாய சங்கங்கள் அதிகளவில் உள்ளன. விவசாய தோட்டங்களில் உரமிடுதல், கவாத்து செய்தல், மறுநடவு செய்தல் போன்ற பணிகள், வங்கி, தேயிலை வாரியத்தின் மானிய உதவிகளை பெற்று கொடுக்க உதவி செய்தல் உட்பட ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளும் நோக்கில், விவசாய சங்கங்களில், "தேயிலை சேவை மையம்' அமைக்கப்பட உள்ளது.
ஒவ்வொரு மையத்திலும் இளைஞர் ஒருவர் ஆலோசகராக நியமிக்கப்படுவார்.
கனரா வங்கி மூலம், தேயிலை சேவை மையங்களுக்கு நிதி உதவி, தேயிலை வாரியம் மூலம் சலுகைகளை பெற்றுத் தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
தேயிலை வாரியம் மூலம், இந்த மையங்களில் செயலாற்றும் இளைஞர்களுக்கு சிறப்பு பயிற்சியும் வழங்கப்படும்.
முதற்கட்டமாக, மாவட்டத்தில், எப்பநாடு, கம்பட்டி, ஒன்னதலை, சேலகொரை,

ஜெகதளா, காட்டேரி, எல்லநள்ளி, முத்தொரை பாலாடா, மேலூர் ஒசஹட்டி, தங்காடு ஆகிய 10 கிராமங்களில் "சேவை மையம்' துவக்கப்பட உள்ளது. இதன் மூலம், விவசாயிகள், அரசு துறையினருக்கு இடையே ஒருங்கிணைப்பு ஏற்படும்; தேயிலை தொழில் மேம்படும். படித்த கிராமப்புற இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறுவர். இவ்வாறு, தெரிவிக்கப்பட்டது.
கூட்டத்தில், ஊட்டி வட்டாரத்தில் உள்ள 70 சிறு தேயிலை விவசாய சங்க பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். முன்னோடி வங்கி முதன்மை மேலாளர் மோகன், தேயிலை வாரிய உதவி இயக்குனர் ரமேஷ், உட்பட பலர் பங்கேற்றனர். தென்னிந்திய தேயிலை சிறு விவசாயிகள் சங்க பொது செயலர் ராஜூ நன்றி கூறினார்.

## பூ க்களின் விலையில் சரிவு

**திண்டுக்கல்:** வரத்து குறைவாக இருந்தாலும், வாங்குவதற்கு வாடிக்கையாளர்கள் இல்லாததால் பூக்கள் விலை குறைந்தது.பனிப்பொழிவு காரணமாக பூக்களின் உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. புதிய தொழில் நுட்பங்களுங்கேற்ப நிழற்கூரை, சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்திய விவசாயிகளுக்கு மகசூலில் பாதிப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. வரத்து குறைவாக இருந்தாலும் கடந்த சில வாரங்களாக கோயில் விழாக்கள் மற்றும் விசேஷ நாட்கள் காரணமாக பூக்களின் விலை உயர்ந்திருந்தது.தற்போது, தேவை குறைந்திருப்பதால் பூக்களின் விலை குறைந்துள்ளது. திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (விலை கிலோவில்) மல்லிகை ரூ. 500, முல்லை ரூ. 500, கனகாம்பரம் ரூ. 350, ஜாதிப்பூ ரூ. 300, காக்கரட்டான் ரூ. 200, சம்மங்கி ரூ. 100, அரளி ரூ. 80, கோழிக்கொண்டை ரூ. 30, விற்பனையானது.

## பசுமை குடில் அமைக்க மானியம்: அதிகாரி தகவல்

**திருவண்ணாமலை:** காய்கனி உற்பத்தி திட்டத்துக்கு, பசுமை குடில் அமைக்க, மானியம் வழங்கப்படுவதாக, தோட்டக்கலைத்துறை இயக்குனர் தெரிவித்தார்.இதுகுறித்து, தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ஜெகநாதன்

கூறியதாவது:தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ், பெரிமெட்ரோ காய்கனி உற்பத்தி திட்டத்தில், வங்கி கடன் பெறும் விவசாயிகளுக்கு, பசுமை குடில் அமைக்க, 0.25 ஏக்கருக்கு, ஒரு லட்சத்து, 16ஆயிரத்து, 875 மானியம் வழங்கப்படும் அதிகபட்சமாக, இரண்டு ஏக்கருக்கு, நான்கு லட்சத்து, 67ஆயிரத்து, 500 ரூபாய் மானியமாக வழங்கப்படும். வங்கி கடன் பெறும் விவசாயிகளுக்கு மட்டுமே இச்சலுகை பொருந்தும். ஏற்கனவே, திருவண்ணாமலை, தண்டராம்பட்டு, கீழ்பென்னாத்தூர், பஞ்சாயத்தில் அடங்கிய விவசாயிகளுக்கு மட்டுமே, இவ்வசதி இருந்தது. தற்போது, 2014-15ம் நிதியாண்டு முதல், மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் பயனடைய, தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.திருவண்ணாமலை, கீழ்பென்னாத்தூர், தண்டாரம்பட்டு, புதுப்பாளையம், துரிஞ்சாபுரம், ஜம்னாமரத்தூர், கலசப்பாக்கம், போளூர், சேத்துப்பட்டு, ஆரணி, வெம்பாக்கம், செங்கம், பெரணமல்லூர், மேற்கு ஆரணி, செய்யாறு, தெள்ளாறு, வந்தவாசி, அனக்காவூர் ஆகிய வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகங்களில், இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள், தங்கள் பெயர்களை உடனே பதிவு செய்து கொள்ளலாம், என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மேட்டூர் நீர்மட்டம் 51.15 அடி**



**மேட்டூர்:** மேட்டூர் அணை நீர்மட்டம் 51.15 அடியாக உள்ளது. மேட்டூர் அணைக்கு நீர் வரத்தை விட, குடிநீருக்காக அதிக அளவில் நீர் திறக்கப்படுவதால் நீர் மட்டம் மீண்டும் சரிந்து வருகிறது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 468 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. குடிநீர் தேவைக்காக அணையில் இருந்து வினாடிக்கு ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்படுகிறது. நீர் மட்டம் 51.15 அடியாக உள்ளது. நீர் இருப்பு 18.81 டிஎம்சி.

### முட்டை விலை 10 காசு குறைப்பு

**நாமக்கல்:** தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நாமக்கல்லில் நேற்று நடந்தது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் முட்டையின் பண்ணைகொள்முதல் விலையில், 10 காசுகள் குறைக்கப்பட்டு ஒரு முட்டையின் விலை 330 காசிலிருந்து 320 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.பிற மண்டலங்களில் முட்டை விலை குறைந்துள்ளதாலும், தமிழகத்தில் காய்கறிகளின் விலை குறைந்துவருவதால் முட்டையின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்திலும் விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ 54 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ 58 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

### தொழிற்சாலை சார்ந்த வேளாண்காடுகள் திறனாய்வுக் கூட்டம்

**மேட்டுப்பாளையம், :** ‘தொழிற்சாலை சார்ந்த வேளாண்காடுகளுக்கான உற்பத்தி மற்றும் விற்பனை தொடர் சங்கிலி‘ திட்ட செயல்பாடுகளை திறனாய்வு செய்ய தேசிய வேளாண்மை புதுமை திட்ட ஆராய்ச்சி திட்டக் குழு தலைவர் மேத்தா, தேசிய ஒருங்கிணைப்பாளர் இஷக்கில் ஆகியோர் நேற்று மேட்டுப்பாளையம் வனக்கல்லூரிக்கு வந்தனர். அவர்களை கல்லூரி முதல்வர் துரைராசு வரவேற்றார். பின் பயனாளிகள் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடந்தது. இதில் மரம் சார்ந்த தொழில் நிறுவன பிரதிநிதிகள், பயனாளிகள் பங்கேற்றனர்.

இதில் ‘மலைவேம்பு உழவர் உற்பத்தியாளர்கள் கம்பெனி‘ அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் மலை வேம்பு வளர்ப்பவர்கள் சரியான விற்பனை வாய்ப்பு மற்றும் சந்தை நிலவரங்களை பெற முடியும். மேலும் மலைவேம்பு, சவுக்கு, தீக்குச்சி மரங்களுக்கான வங்கி கடன் பெறும் திட்டம் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

அப்போது ‘தொழிற் சாலை சார்ந்த வேளாண்காடுகளுக்கான உற்பத்தி மற்றும் விற்பனை தொடர் சங்கிலி‘ திட்ட தலைவர் பார்த்திபன் பேசியதாவது:

மேட்டுப்பாளையத்திலுள்ள வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ‘தொழிற்சாலை சார்ந்த வேளாண் காடுகளுக்கான உற்பத்தி மற்றும் விற்பனை தொடர் சங்கிலி‘ எனும் திட்டம் கடந்த 2008ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் நோக்கம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மரம் சார்ந்த தொழிற்சாலைகள், உழவர்கள் மற்றும் வங்கி நிறுவனங்களை ஒரே அணியில் கொண்டு வந்து அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் உதவுவதே ஆகும்.

இத்திட்டம் மூலம் முதலில் 5 மாவட்டங்களில் 200 ஹெக்டர் பரப்பளவில் மட்டுமே தொழிற்சாலை சார்ந்த வேளாண் காடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

ஆனால் இன்று 29 மாவட்டங்களில் சுமார் 39 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் இத்திட்டத்தின் கீழ் மரம் வளர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது.

அதே போல 3 தொழிற்சாலைகள் மட்டுமே பங்கு கொண்ட இத்திட்டத்தில் இன்று 17 தொழிற்சாலைகள் பங்கு கொண்டுள்ளன.இத்தொழிற்சாலைகளுடன் ஒப்பந்த அடிப்படையில் மரங்களை நட்டு வளர்ப்பதன் மூலம் சரியான சந்தை விலை பெறப்பட்டு விவசாயிகள் நல்ல பயன் பெற்றுள்ளனர்.

இவ்வாறு அவர் பேசினார்.

**விலை வீழ்ச்சி தடுக்க கல்லூரிகளில் தக்காளி திருவிழா வேளாண் அதிகாரி வேண்டுகோள்**

**உடுமலை, :** விளைச்சல் அதிகரித்ததன் காரணமாக விலை வீழ்ச்சி அடைந்துள்ள தக்காளிக்கு விலை கிடைக்கும் வகையில் கல்வி நிறுவனங்கள் தக்காளி திருவிழா கொண்டாட வேண்டும் என வேளாண் இணை இயக்குனர் வேண் டுகோள் விடுத்துள்ளார்.

உடுமலை வட்டம் வேளாண் உதவி இயக்குனர் இளங்கோவன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: காய்கறிகளில் பதப்படுத்த உகந்த பலவித பண்பு களை கொண்ட தக்காளி விலை குறைந்து விட்டதால் மதிப்பு குறைந்ததாக வருந்த வேண்டாம். ஒவ்வொரு பகுதியிலும் விளையும் அற்புத தக்காளி யை நீண்ட நாள் பயன்படுத்த அதன் சேமி க்கும் குணத்தினை, தரத்தை அறுசுவைகளை கூட்டிட வேண்டும்.

தக்காளியில் ஊட்டச்சத்து நிறைந்துள்ளது. சாலட் எனப்படும் பச்சையாக உண்ண உகந்த தக்காளியை எல்லா வயதினரும் சாப்பிடலாம். சமைத்து சாப்பிடுவதால் அதன் வைட்டமின் `சி‘ சத்து அழிவதில்லை. புத்துணர்ச்சி தர எளிதில் ஜீரணமாகும் விதத்தில் இரும்புசத்து, பொட்டாசியம், உப்பு, வைட்டமின் `ஏ‘ சத்துக்கள் உள்ளது. இதனால் சரீரம் வலுப்படும். வயிற்றுக்கோளாறு, ஈரல் கோளாறு வராது. ரத்தத்தை சுத்தமாக்குவதோடு, மூலத்தை தடுக் கும். சுரத்துக்கும் நல்ல பரிகாரம் ஆகும். கறிக்கு இணை யான நன்மை உள்ள தக்காளி யை தினமும் சேர்க்கலாம்.

பாதி பழுத்த தக்காளியை சாப்பிடுவதால் கோடையில் ஏற்படும் வயிற்றுப்போக்கு நீங்கும். வயிற்றுக் கடுப்பு நோய்க்கு பூண்டு மற்றும் எலுமிச்சை சாற்றுடன் சேர்த்து தக்காளியை உண்ண வேண்டும். தக்காளி சாறு டன் தேன் சேர்த்து பருகிட ரத்தம் சுத்தப்படும். பழத்தை வேக வைத்து கட்டினால் நீண்ட நாள் ஆறாத புண் கூட ஆறும். நரம்புக்கு டானிக் மாதிரி உதவும். தக்காளி மலச்சிக்கலை போக்கும்.

தினசரி உணவில் சேர்த்தால் சிறுநீரக செயல்பாடு சீரா கும். தக்காளி ரசம், தக்காளி சூப், பழச்சாறு, சாஸ், கெட்ச்அப் முதலியவற்றில் தக்காளியை சேர்த்து சாப்பிடலாம். தக்காளியின் விலை குறைந்துள்ளதால் அதன் பயன்பாட்டை அனைவரும் அதிகரித்து தக்காளி ஊறுகாய், ஜாம், சாஸ், அல்லது கெட்ச்அப் ஜீஸ், தக்காளி சாதம், சூப் முதலிய பல வடிவங்களில் குறைந்த செலவில் தயாரிக்கலாம். பள்ளி, கல்லூரி உள்ளி ட்ட கல்விநிறுவனங்கள் தக்காளி திருவிழா கொண் டாடி பழ உபயோகத்தை அதிகரிக்க வேண்டும். இதன் மூலம் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும் பெருமை சேர்க்க வழி உள்ளது. தக்காளி பயன்படுத்தி பெரிய உற்பத்தி மையங்கள் கூட அமைக்கலாம் அதற்கு அரசு மானியம் உள்ளிட்ட உதவிகள் வழங்குகின்றன. வங்கிகளில் கடன் பெற்று தொழில் முனைவோர் சுயஉதவி குழுக்கள், ட்ரஸ்டுகள், விவசாய சங்கங்கள் தக்காளி பதனிடும் ஆலை நிறுவலாம் என அதில் கூறப்பட்டுள்ளது.

**எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் கைபேசி மூலம் குரல்வழி செய்தி விவசாயிகளுக்கு பயனளிக்கும்வேளாண் அதிகாரி பெருமிதம்**

**புதுக்கோட்டை, :** புதுக்கோட்டை தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய கைபேசி மூலம் குரல்வழி குறுஞ்செய்தி அனுப்பும் திட்டம் துவக்க விழா நடந்தது.

விழாவிற்கு வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் ஞானமலர் தலைமை வகித்தார். புதுகை வேளாண் இணை இயக்குநர் ஷாஜகான் குரல்வழி குறுஞ்செய்தி அனுப்பும் திட்டத்தை துவக்கி வைத்து பேசுகையில், விவசாயிகள் தற்போது பல்வேறு சவால்களைச் சந்தித்து வருகின்றனர். இச்சவால்களை சமாளிக்க பல்வேறு தகவல்களும் ஆலோசனைகளும் தேவைப்படுகின்றது. இதை பூர்த்தி செய்யும் வகையில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் குரல்வழி குறுஞ்செய்தி அனுப்பும் திட்டத்தை துவங்கியிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

குரல்வழி செய்தி அனைத்து விவசாயிகளுக்கும் பயனுள்ளதாக அமையும். குரல்வழி செய்தி மூலம் அனுப்பப்படும் வானிலை தகவல்கள் மற்றும் ஆலோசனைகள், மண் மற்றும் பாசனநீர் பரிசோதனை விதைகள் மற்றும் ரகங்கள் தேர்வு நவீன தொழில்நுட்ப தகவல்கள் பயிர் பாதுகாப்பு தகவல்கள், சந்தை நிலவரங்கள், அரசு நலத்திட்டங்கள் பயிர் மேலாண்மை தகவல்கள் போன்றவை விவசாய உற்பத்தியை பெருக்க உதவியாய் அமையும். மேலும் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் துவங்கியுள்ள விவசாய நண்பன் உதவி மையம் விவசாயிகளுக்கு அவ்வப்போது ஏற்படும் சந்தேகங்களை தீர்க்க உதவும். எனவே விவசாயிகள் இத்திட்டத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன திட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜ்குமார் திட்டத்தை விளக்கி பேசுகையில், விவசாயிகளின் தேவைகளின் அடிப்படையில் விவசாயிகளின் ஆலோசனையைப் பெற்று இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் தினசரி இரண்டு குரல்வழி குறுஞ்செய்தி பதிவு செய்த விவசாயிகளுக்கு அனுப்பப்படும். விவசாயிகள் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்க விவசாய நண்பன் உதவி மையம் செயல்படுகின்றது. விவசாயிகள் 9677759545, 9677759549 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு விவசாயம் தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கம் பெறலாம் என்றார்.

நிகழ்ச்சியில் முன்னோடி விவசாயிகள் தனபதி, முருகேசன், காமராசு, ரவி ஆகியோர் வாழ்த்திப் பேசினார். நிகழ்ச்சியில் மாவட்டம் முழுவதிலிருந்தும் 125க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். நிகழ்ச்சிகளை ஆராய்ச்சி நிறுவன அலுவலர்கள் சரவணன், வினோத்கண்ணா, ஆனந்தி ஆகியோர் தொகுத்து வழங்கினர். முன்னதாக ஆராய்ச்சி மைய அலுவலர் கலையரசி வரவேற்றார். தேசிய இணைய கல்விக்கழக பிரதிநிதி பன்னீர்செல்வம் நன்றி கூறினார்.

### நடவு துவரை பயிர் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி நிறைவு

**ஆலங்குடி, :** அட்மா பண்ணை பள்ளி சார்பில் ஆலங்குடியை அடுத்த வடகாடு பகுதியில் தமிழ்நாடு அரசு வேளாண்துறை சார்பில் அட்மா பண்ணை பள்ளி நடத்திய நடவு துவரை பயிர் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி நிறைவு விழா

நடந்தது.

வடகாடு குணசேகரன் என்பவரது வயலில் தொடர்ந்து ஆறு வாரமாக விதைநேர்த்தி, நாற்றங்கால், நடவு, உரம் மற்றும் களை நிர்வாகம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, டி.ஏ.பி தெளித்தல் முதலிய தொழில்நுட்பங்கள் வேளாண்மைத்துறை அலுவலர்கள் மற்றும் வம்பன் வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகளால் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியில் 25 விவசாயிகள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு உபகரணப்பை வழங்கப்பட்டது.

இதன் நிறைவு விழாவிற்கு வேளாண் இணை இயக்குநர் ஷாஜஹான் தலைமை வகித்தார். உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் சாந்தி, அட்மா விவசாயிகள் ஆலோசனைக் குழு தலைவர் தினகரசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண் உதவி இயக்குநர் சிவகுமார் வரவேற்றார்.

விழாவில் ஷாஜகான் பேசுகையில், வேளாண் துறையினர் கூறியபடி சாகுபடி செய்தால் நடவு துவரை பயிரில் அதிக மகசூல் பெறலாம். பண்ணைப் பள்ளியில் தாங்கள் கற்ற சாகுபடி தொழில்நுட்பங்களை கடைப்பிடிப்பதோடு மற்றவர்களுக்கும் எடுத்து கூறி உணவு உற்பத்தியை பெருக்க வேண்டும் என்றார். வேளாண் அலுவலர் ஜெகதீஸ்வரி, உதவி வேளாண் அலுவலர் மகேஸ்வரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

அட்மா தொழில்நுட்ப மேலாளார் மகேந்திரன் நன்றி கூறினார். அட்மா தொழில்நுட்ப வல்லுநர்கள் பாண்டியன், ஆனந்தாராஜ் ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**நாக்பூரில் நடக்கும் கண்காட்சியில் கொள்ளிடம் விவசாயிகள் 9 பேர் பங்கேற்க முடிவு**

**கொள்ளிடம், :** நாக்பூரில் 9ம் தேதி நடைபெறும் தேசிய வேளாண் கண்காட்சியில், கொள்ளிடம் வட்டார விவசாயிகள் 9 பேர் கலந்து கொள்கின்றனர்.

நாகை மாவட்டம் கொள்ளிடம் வட்டார வேளாண்துறை சார்பில், அத்மாகுழு கூட்டம் நடைபெற்றது. வட்டார வேளாண் அலுவலர் கலியபெருமாள் வரவேற்றார். வேளாண் உதவி இயக்குநர் பால்ராஜ் முன்னிலை வகித்தார்.

மாவட்ட தோட்டக்கலை உதவி இயக்குநர் கணேசன் கலந்து கொண்டு, விவசாயிகளுக்கான ஒருங்கிணைந்த கையேடு, டைரி மற்றும் காலெண்டர் வழங்கி பேசுகையில், சூரிய ஒளியினால் இயங்கும் மின் மோட்டார்களை விவசாயிகள் மானிய விலையில் வாங்கிப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். அத்மா திட்ட தலைவர் ரகு, வேளாண் அலுவலர் ரேகா, இயற்கை விவசாயிகள் சங்க தலைவர் ராஜாராமன், வேளாண் முன்னேற்றக்குழு செயலாளர் தங்கசாமி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு செயலாளர் பன்னீர்செல்வம், விவசாயிகள் அமைப்பு தலைவர் தம்பியாபிள்ளை, வேளாண் உதவி அலுவலர்கள் சந்திரசேகர், வேதையராஜன், கனகராஜ், பாலச்சந்திரன், மகேஷ், ராமசந்திரன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், வரும் 9ந் தேதி நாக்பூரில் நடைபெறும் தேசிய அளவிலான விவசாய கண்காட்சியில், கொள்ளிடம் வட்டாரத்திலிருந்து 9 விவசாயிகள் சென்று கலந்து கொள்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முடிவில் அத்மா தொழில்நுட்ப வல்லுநர் கார்த்தி நன்றி கூறினார்.

## பதிவு செய்யாத 7 லாரி கரும்புகள் கூட்டுறவு ஆலையிடம் ஒப்படைப்பு

**புவனகிரி, :** சேத்தியாத்தோப்பு எம்ஆர் கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் தனி அலுவலர் முத்து, கடலூர் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில், அனுமதி பெறாத கரும்புகள் தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு கொண்டு செல்லப்படுவதாக குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில் கடலூர் மாவட்ட ஆட்சியர் ராஜேந்திரரத்னூ உத்தரவுப்படி வேளாண்மைத்துறை அதிகாரிகள் அதிரடி சோதனையில் ஈடுபட்டார்கள்.

அப்போது நெல்லிக்குப்பம் பகுதியில் பதிவு செய்யப்படாமல் 7 லாரிகளில் கரும்புகள் கொண்டு வரப்படுவதை அதிகாரிகள் கண்டு பிடித்தார்கள். விசாரணையில் அந்த கரும்புகள் பதிவு செய்யப்படாத கரும்புகள் என்பது தெரிய வந்தது. பின்னர் அவற்றை சேத்தியாத்தோப்பு எம்ஆர் கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கொண்டு செல்ல அதிகாரிகள் உத்தரவிட்டார்கள்.

இதையடுத்து கரும்பு லாரிகள் சேத்தியாத்தோப்பு சர்க்கரை ஆலைக்கு கொண்டு வரப்பட்டது.

### ரூ.7,698 மெட்ரிக் டன் நெல் கொள்முதல்

**ஈரோடு, :** ஈரோடு மாவட்டத்தில் காவிரி, பவானி ஆறுகள் மூலமாகவும், காலிங்கராயன், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, கீழ்பவானி மற்றும் மேட்டூர் வலதுகரை வாய்க்கால் பாசனத்தின் மூலமாகவும் நெல், கரும்பு, மஞ்சள் பயிரிடப்பட்டு வருகிறது. விவசாயிகள் விளைவிக்கும் விளை பொருட்களை கொள்முதல் செய்ய அரசு சார்பில் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தை பொருத்தவரை தற்போது நெல் அறுவடை சீசன் என்பதால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழகத்தின் சார்பில் 28 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

36 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க அரசு உத்தரவிட்டுள்ள நிலையில், தற்போது 28 இடங்களில் மட்டுமே நெல் வரத்தை கணக்கில் கொண்டு கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. இந்த கொள்முதல் நிலையங்கள் மூலமாக ஏ கிரேடு நெல் ஒரு கிலோ ரூ.14.15ம், சன்னரகத்திற்கு ரூ.13.50ம் விலையாக கொடுக்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் திறக்கப்பட்டுள்ள கொள்முதல் நிலையங்கள் மூலமாக இதுவரை 7 ஆயிரத்து 698 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, நசியனூரில் 505 மெட்ரிக் டன்னும், அவல்பூந்துறையில் 328 மெட்ரிக் டன்னும், எழுமாத்தூரில் 323 மெட்ரிக் டன்னும், மொடக்குறிச்சியில் 302 மெட்ரிக் டன்னும், கொடுமுடி 1வது யூனிட்டில் 408 மெட்ரிக் டன்னும், 2வது யூனிட்டில் 253 மெட்ரிக் டன்னும், சிவகிரி 1வது யூனிட்டில் 386 மெட்ரிக் டன்னும், 2வது யூனிட்டில் 371 மெட்ரிக் டன்னும், காஞ்சிக்கோயிலில் 355 மெட்ரிக் டன்னும், வெள்ளோட்டில் 316 மெட்ரிக் டன்னும், கே.ஜி.வலசில் 192 மெட்ரிக் டன்னும், கூகலூரில் 764 மெட்ரிக் டன்னும், நஞ்சகவுண்டன்பாளையத்தில் 380 மெட்ரிக் டன்னும், புலவகாளிபாளையத்தில் 13 மெட்ரிக் டன்னும், டி.என்.பாளையத்தில் 53 மெட்ரிக் டன்னும்,

புதுவெள்ளியம்பாளையத்தில் 13 மெட்ரிக் டன்னும், புதுக்கரைபுதூரில் 564 மெட்ரிக் டன்னும், ஏளூரில் 68 மெட்ரிக் டன்னும், அத்தாணியில் 591 மெட்ரிக் டன்னும், பவானியில் 527 மெட்ரிக் டன்னும், அம்மாபேட்டையில் 477 மெட்ரிக் டன்னும், பெரியபுலியூரில் 235 மெட்ரிக் டன்னும், கவுந்தப்பாடியில் 223 மெட்ரிக் டன்னும், பி.மேட்டுப்பாளையத்தில் 51 மெட்ரிக் டன்னும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கள்ளிப்பட்டி, காசிப்பாளையம், உக்கரம், நாகரணை ஆகியப் பகுதிகளில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் இதுவரை விவசாயிகள் நெல் ஏதும் வழங்கவில்லை. கடந்த ஆண்டை விட நெல் கொள்முதல் விலை ஏ கிரேடிற்கு ரூ.13.50ல் இருந்து ரூ.14.15 ஆகவும், சாதாரண ரகத்திற்கு ரூ.13ல் இருந்து ரூ.13.60ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளதால், இந்த ஆண்டு நெல்வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தினர் கூறுகையில், ‘கடந்த ஆண்டு கடுமையான வறட்சியின் காரணமாக நெல்வரத்து குறைந்து போனது. ஆனால், இந்த ஆண்டு பாசனத்திற்கு தேவையான அளவு தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில், பெரும்பாலான பகுதிகளில் விவசாயிகள் நெல் பயிரிட்டிருந்தனர்.

தற்போது அறுவடை சீசன் என்பதால் அரசு உத்தரவின்படி, நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. 36 கொள்முதல் நிலையங்களில் 28 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இடங்களில் நெல் விளைச்சலை கணக்கில் கொண்டு நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்’ என்றனர்.

## விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி

**சத்தியமங்கலம், :** தேசிய வேளாண் முன்னோடித்திட்டத்தின் கீழ் மலர் சாகுபடி விவசாயிகளுக்கு குண்டுமல்லியில் துல்லிய சாகுபடி தொழில்நுட்பப்பயிற்சி பவானிசாகர் அருகே உள்ள துண்டன்சாலை பிரிவில் நடைபெற்றது.

பயிற்சிக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மலரியல் மற்றும் நில

எழிலூட்டும் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் ஜவஹர்லால் தலைமை தாங்கினார். முதுநிலை ஆராய்ச்சியாளர் ரவிக்குமார் வரவேற்றார். பேராசிரியர்கள் கண்ணன், கல்யாணசுந்தரம், நக்கீரன், வெங்கடேசபழனிச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மல்லிகை மலர் மொட்டுகளில் புழுக்களை கட்டுப்படுத்துதல், யானைக்கொம்பன் ஈ, இலைப்புள்ளி நோய் உள்ளிட்டவைகளை கட்டுப்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு பேராசிரியர்கள் செயல்முறை விளக்கம் மற்றும் பயிற்சி அளித்தனர்.

இதில் கலந்து கொண்ட 27 விவசாயிகளுக்கு பூச்சிமருந்துகள், வளர்ச்சி ஊக்கிகள், நுண்ணூட்ட சத்துக்கள் உள்ளிட்ட ரு.2 லட்சத்து 16 ஆயிரம் மதிப்பிலான இடுபொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தோட்டக்கலை ஆராய்ச்சியாளர் பினிசுந்தர் செய்திருந்தார். முடிவில் முதுநிலை ஆராய்ச்சியாளர் கணேஷ் நன்றி கூறினார்.

## 1,31,404 மெ.டன் நெல் கொள்முதல் முறைகேடுகளை தடுக்க சிறப்பு குழுக்கள் அமைப்பு

**தஞ்சை, :** தஞ்சை மாவட்டத்தில் 402 நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் இதுவரை 1,31,404 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. முறைகேடு தடுக்க சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது என்று கலெக்டர் சுப்பையன் தெரிவித்தார்.

தஞ்சை அருகே சித்திரக்குடி, தென்னங்குடி கிராமங்களில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை கலெக்டர் சுப்பை யன் ஆய்வு செய் தார். அப்போது நெல் கொள் முதல் நிலையங்களுக்கு வந்திருந்த விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். பின்னர் அவர் கூறும்போது, விவசாயிகள் அனைவரும் பயன்பெறும் வகையில் அரசின் ஊக்கத்தொகையாக சன்னரக நெல் குவிண்டாலுக்கு ரூ.70, சாதாரண நெல் குவிண்டாலுக்கு ரூ.50 சேர்த்து கொள்முதல் விலையை சன்ன ரகத்திற்கு குவிண் டால் ரூ.1415 என்றும், சாதாரண

ரகத்திற்கு குவிண்டால் ரூ.1360 என அறிவிக்கப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்ட விவசாயிகள் வேண்டுகோளை ஏற்று தமிழக முதல்வர் நெல்லின் ஈரப்பத அளவை 17 சதவீதம் என்பதை தளர்த்தி 20 சதவீதம் வரை கொள்முதல் செய்யவும், சேதமடைந்த, நிறம் மாறிய நெல்லின் அளவை 4 சதவீ தம் என்பதை 5 சதவீதம் வரை கொள்முதல் செய் யவும் ஆணையிட்டுள்ளார். இந்த தளர்வு வரும் செப்டம்பர் 30ம் தேதி வரை கொள்முதல் செய்யப்படும் சம்பா நெல்லுக்கு பொருந் தும். விவசாயிகள் சிரமமின்றி நெல் முழுவதையும் கொள்முதல் செய்து உடனுக்குடன் பணம் பட்டு வாடா செய்ய அனைத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விவசாயிகளின் தேவைக்கேற்ப கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

தஞ்சை மாவட்டத்தில் 394 நேரடி நெல் கொள் முதல் நிலையம், 8 நட மாடும் நெல் கொள் முதல் நிலையம் என மொத்தம் 402 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதுவரை தஞ்சை மாவட்டத்தில் 1,31,404 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கொள்முதல் நிலையங்களில் முறைகேடுகளை தடுக்கும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக் காக மாவட்ட அளவில் 2 சிறப்பு கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது என்றார். தஞ்சை தாசில்தார் காமராஜ் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.சேதுபாவாசத்திரத்தில்

## 3 நாட்கள் நடைபெறும் தேசிய மீனவர் மாநாடு புதுவையில் துவங்கியது

**புதுச்சேரி, :** புதுவையில் 3 நாள் நடக்கும் தேசிய மீனவர் மாநாடு நேற்று தொடங்கியது. மாநாட்டில் கோவா அமைச்சர் அலினா சல்தானா கலந்து கொண்டு மாநாட்டை தொடங்கி வைத்தார்.

இந்தியாவில் 10 கட லோர மாநிலங்களை கொண்ட தேசிய மீனவர் பேரவையின் தேசிய மாநாடு ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு மாநிலங்களில் நடைபெறுகிறது. இந்த ஆண்டு புதுவையில் நேற்று தொடங்கியது. தொடக்க விழாவில் ஆண்டன் கோமஸ் வரவேற்றார். முன்னாள் எம்எல்ஏ இளங்கோ தலைமை தாங்கினார்.

தேசிய மீனவர் பேரவை நிர்வாகிகள் கேரளாவை சேர்ந்த பீட்டர், கர்நாடகா மாநிலத்தை சேர்ந்த பிரதீப்சாட்டர்ஜி முன்னிலை வகித்தனர். பீகார் மாநில எம்பி ஜெய்நாராயண் பிரசாத் நிஷாத் மாநாட்டு கொடியினை ஏற்றி வைத்தார்.
விழாவில் சிறப்பு விருந்தினராக கோவா மாநில வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அலினாசல்தான் கலந்து கொண்டு மாநாட்டினை தொடங்கி வைத்தார்.
மாநாட்டு துவக்க நிகழ்ச்சியில் பாஜக மாநில தலைவர் தாமோ தரன், விடுதலைசிறுத்தை கள் கட்சி பாவாணன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஷேசாச்சலம், ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.
மாநாடு இன்றும் நாளை யும் உப்பளம் செயிண்ட் சேவியர் தேவாலய வளாக அரங்கில் நடக்கிறது. மாநாட்டில் தமிழகம், புதுவை, குஜராத், மகாராஷ்டிரா, கோவா உள்பட கடலோர மாநிலங்களை சேர்ந்த 120 பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.
ஆய்வரங்கம், குழு விவாதம், செயற்குழு, பொதுக்குழு, நிர்வாகிகள் தேர்தல் நடக்கிறது. தேசிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். நாளை முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்படுகிறது.

தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தேர்தலுக்குப் பின் யூரியா விலை உயரும்?**



**புதுடெல்லி,**

பொதுத் தேர்தலுக்குப் பிறகு யூரியா விலை உயர்த்தப்படலாம் என இந்தியா ரேட்டிங்ஸ் அண்டு ரிசர்ச் நிறுவனம் சூசகமாக தெரிவித்துள்ளது.

யூரியா அல்லாத உரங்களுக்கு சத்து சார்ந்த மானியக் கொள்கை அமல்படுத்தப்பட்டுள்ளது. அதிக பயன்பாடு மற்றும் விவசாயிகளின் நலன் கருதி யூரியா விலையை மட்டும் மத்திய அரசு நிர்ணயம் செய்து வருகிறது. தற்போது ஒரு டன் யூரியாவின் சில்லறை விற்பனை விலை ரூ.5,360-ஆக உள்ளது. இது அடக்க விலைக்கும் குறைவானதாகும். இதனால் உர நிறுவனங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை மத்திய அரசு மானியம் வழங்கி ஈடு செய்கிறது.

உர மானியத்தால் மத்திய அரசுக்கு பெரும் சுமை ஏற்படுகிறது. கடந்த பத்து ஆண்டுகளில் யூரியா விலையில் பெரிய மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. அதே சமயம் மானியத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட்டில் அதிக நிதி ஒதுக்க வேண்டியுள்ளது. இதனால் நீண்ட காலமாக யூரியாவிற்கான சில்லறை விற்பனை விலையை உயர்த்த வேண்டும் என மத்திய உர அமைச்சகம் கோரிக்கை விடுத்து வருகிறது.தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் தற்போது யூரியா விலையை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் இல்லை. எனினும் தேர்தலுக்குப் பின் யூரியா விலை உயர்த்தப்படுவதற்கான சாத்தியம் உள்ளது என இந்தியா ரேட்டிங்ஸ் தெரிவித்துள்ளது.

**சர்வதேச சந்தையில் விலை அதிகரித்ததால் காபி ஏற்றுமதி 38% வளர்ச்சி**



**புதுடெல்லி,**

காபி ஏற்றுமதி ஜனவரி மாதத்தில் 38 சதவீதம் அதிகரித்து 26,161 டன்னாக உயர்ந்துள்ளது. சர்வதேச சந்தையில் விலை உயர்ந்திருந்ததால் ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக இந்திய காபி வாரியம் தெரிவித்துள்ளது. சென்ற ஆண்டின் இதே மாதத்தில் காபி ஏற்றுமதி 18,979 டன்னாக இருந்தது.

<u>பிரேசில் முதலிடம்</u>

சர்வதேச அளவில் காபி உற்பத்தியில் பிரேசில் முதலிடத்தில் உள்ளது. நடப்பு ஆண்டில் பிரேசிலின் காபி உற்பத்தி முந்தைய மதிப்பீடான 5.80 கோடி மூட்டைகளிலிருந்து 4.80 கோடி மூட்டைகளாக குறைக்கப்பட்டுள்ளது. அந்நாட்டின் காபி உற்பத்தி குறையும் என்ற மதிப்பீட்டால் சர்வதேச சந்தையில் காபி விலை கடந்த ஒரு மாதமாக அதிகரித்துள்ளது.

நம் நாட்டில் தற்போது காபி அறுவடை பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் சிறிய விவசாயிகளும் உற்பத்தி செய்த காபியை ஏற்றுமதி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதுவும் காபி ஏற்றுமதி அதிகரிப்பிற்கு ஒரு காரணமாகும். காபி ஏற்றுமதி ஜனவரி மாதத்தில் மதிப்பு அடிப்படையில் ரூ.304.70 கோடியிலிருந்து ரூ.393.70 கோடியாக அதிகரித்துள்ளது.

ரோபஸ்டா காபி ஏற்றுமதி 90 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்து 10,101 டன்னாக உயர்ந்துள்ளது. இது சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 5,306 டன்னாக இருந்தது. அராபிகா காபி ஏற்றுமதி 46 சதவீதம் அதிகரித்து 6,290 டன்னிலிருந்து 9,200 டன்னாக அதிகரித்துள்ளது. அதே சமயம் இன்ஸ்டன்ட் காபி ஏற்றுமதி 7,356 டன்னிலிருந்து 6,838 டன்னாக குறைந்துள்ளது.

இத்தாலிக்கு அதிகபட்சமாக 5,675 டன் காபி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. ஜெர்மனி மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்கு முறையே 2,621 மற்றும் 2,109 டன் காபி ஏற்றுமதியாகி உள்ளது. ஜோர்டான் (1,674 டன்), துருக்கி (1,646 டன்)

மற்றும் ரஷ்யா (1,309 டன்) ஆகிய நாடுகளும் இந்தியாவில் இருந்து அதிகளவில் காபி இறக்குமதி செய்துள்ளன.

<u>முதல் **10** மாதங்களில்...</u>

நடப்பு நிதி ஆண்டின் முதல் 10 மாதங்களில் (ஏப்ரல்-ஜனவரி) காபி ஏற்றுமதி 2.26 லட்சம் டன்னிலிருந்து 2.42 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. நடப்பு 2013-14 பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்) காபி உற்பத்தி 3,11,500 டன்னாக இருக்கும் என காபி வாரியம் மதிப்பிட்டுள்ளது. இது சென்ற பருவத்தை காட்டிலும் (3,18,200 டன்) 2.1 சதவீதம் குறைவாகும்.

**கரும்புக்கான ஆதார விலை குவிண்டாலுக்கு ரூ.220 ஆக உயர்வு மத்திய மந்திரிசபை ஒப்புதல்**



**புதுடெல்லி,**

கரும்புக்கான அடிப்படை ஆதார விலையை குவிண்டாலுக்கு ரூ.220 ஆக உயர்த்த மத்திய மந்திரி சபை ஒப்புதல் அளித்தது.

<u>கரும்பு விலை</u>

டெல்லியில், மத்திய மந்திரிசபை கூட்டம் நடைபெற்றது. அதில், 2014–2015–ம் பருவத்தில், கரும்புக்கு சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டிய அடிப்படை ஆதார விலையை குவிண்டாலுக்கு 10 ரூபாய் உயர்த்த பொருளாதார விவகாரங்களுக்கான மந்திரிசபை கமிட்டி ஒப்புதல் அளித்தது.

இதன்படி, கரும்புக்கான அடிப்படை ஆதார விலை குவிண்டாலுக்கு ரூ.220 ஆக இருக்கும்.

**சாத்தனூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு 8 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும்**



விவசாய பாசனத்திற்காக சாத்தனூர் அணையில் இருந்து கலெக்டர் ஆ.ஞானசேகரன் தண்ணீர் திறந்தபோது எடுத்த படம்.

**தண்டராம்பட்டு,**

சாத்தனூர் அணையில் இருந்து விவசாய பாச னத்திற்கு நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. கலெக் டர் ஞானசேகரன் தண் ணீர் திறந்து விட்டார்.

<u>சாத்தனூர் அணை</u>

திருவண்ணாமலை மாவட் டம் சாத்தனூர் அணையில் இருந்து இடது மற்றும் வலது புறக்கால்வாய்கள் மூலம் திருவண்ணாமலை, விழுப் புரம் மாவட்டங்களை சேர்ந்த 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன.

இதற்காக ஒவ்வொரு ஆண் டும் சாத்தனூர் அணையில் இருந்து விவசாய பாசனத் திற்கு தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. சாத்தனூர் அணை யின் உயரம் 119 அடியாகும், இதன் மொத்த கொள்ளளவு 7321 மில்லியன் கன அடி.

<u>தண்ணீர் திறப்பு</u>

இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து விட்டதால் தற் போது அணையின் நீர் மட் டம் 89.05 அடியாக உள்ளது. இந்த ஆண்டு விவசாய பாச னத் திற்காக நேற்று அணையில் இருந்து இடது மற்றும் வலது புற கால்வாய்கள் மூலம் தண் ணீர் திறக்கப்பட் டது.

கலெக்டர் அ.ஞானசேகரன் தலைமை தாங்கி அணையில் இருந்து விவசாய பாசனத் திற்கு தண்ணீர் திறந்துவிட் டார். அக்ரி கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ. முன்னிலை வகித் தார்.

நிகழ்ச்சியில் கலெக்டர் அ.ஞானசேகரன் பேசியதா வது:-

<u>8 ஆயிரம் ஏக்கர்</u>

இந்த ஆண்டு மழை பொய்த்து விட்டதால் அணை யில் உள்ள 1364 மில்லியன் கன அடி நீர் பராமரிப்பு மற்றும் மீன் வளர்ப்புக்கு போக மீத முள்ள 983 மில்லியன் கன அடி நீர் இடது மற்றும் வலது புற கால்வாய் ஏரிகளுக்கு வருகிற 1-ந் தேதி வரை 23 நாட் களுக்கு திறந்துவிடப்படு கிறது.

திருக்கோவிலூர் பழைய ஆயக்கட்டு நிலங்களுக்கு நாளை (8-ந் தேதி) வரை 3 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதன் மூலம் திருவண்ணாமலை மாவட் டத்தில் 2,210 ஏக்கர் நிலங்க ளும், விழுப்புரம் மாவட்டத் தில் 5,908 ஏக்கர் நிலங்களும் பான வசதிபெறும். விவசாயி கள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

<u>மேற்கண்டவாறு கலெக்டர் பேசினார்.</u>

அதற்கு அக்ரி கிருஷ்ண மூர்த்தி எம்.எல்.ஏ. பேசிய தாவது:-

<u>ரூ.50 கோடி வழங்க கோரிக்கை</u>

தமிழகத்தில் உள்ள நீர் பாசன கால்வாய்களை தூர் வாரி சீரமைக்க ரூ.8 ஆயிரம் கோடியை சட்டமன்றத்தில் அறிவித்து முதல்-அமைச்சர் ஜெயலலிதா நிதி ஒதுக்கி, அவ ருடைய ஆணையின்பேரில் அதற்கான பணிகள் நடை பெற்று வருகிறது.

ஏற்கனவே சாத்தனூர் அணையினை மேம்படுத்திய முதல்-அமைச்சர் ஜெயலலிதா கவனத்திற்கு மாவட்ட நிர் வாகம் சார்பில் சாத்தனூர் அணை கால்வாய்களை மேம் படுத்தவும், பாசன கால்வாய் களை தூர்வாரவும், சாத்தனூர் அணையில் சுற்றுலா பயணி களுக்கு வேண்டிய வசதிகளை செய்யவும் ரூ.50 கோடி வழங்க கோரிக்கை வைக்கப்பட் டுள்ளது.

விரைவில் வழங்குவார்

முதல்-அமைச்சர் ஜெயல லிதா விரைவில் அதற்கான நிதியை வழங்க இருக்கிறார். மழைபொய்த்தாலும் இருக் கின்ற பயிர்களை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உரிய நேரத்தில் அணையை திறக்க முதல்-அமைச்சர் உத்தர விட்டுள்ளார். விவசாயிகள் இதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேற்கண்டவாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் எஸ்.ராமச்சந்தி ரன், எம்.எல்.ஏ.க்கள் ஏ.கே.அரங்கநாதன், சுரேஷ், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் எம்.எஸ்.நைனாக் கண்ணு, தண்டராம்பட்டு ஒன்றியக்குழு தலைவர் டி.ஜானகிராமன், பாசன சங்க தலைவர் ஜெயராமன், தண் டராம்பட்டு கூட்டுறவு வங்கி தலைவர் எஸ்.ஆர்.தருமலிங் கம், செயற்பொறியாளர்கள் நடராஜன், நாகலிங்கம், உதவி செயற்பொறியாளர்கள் செல்வராஜ், மோகனசுந்தரம், தானிப்பாடி மணிமேஸ்திரி, , ஆறுமுகம், வட்டார வளர்ச்சி அலுவலர் வேல்முருகன் மற் றும் பலர் கலந்து கொண்ட னர்.

முன்னதாக உதவி செயற் பொறியாளர் ஷாஜகான் வரவேற்றார். முடிவில் உதவி செயற்பொறியாளர் ரமேஷ் நன்றி கூறினார்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் விஜயக்குமார் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

**திருவண்ணாமலை வட்டாரத்தில் நடைபெறும் வேளாண்மை திட்ட பணிகள் துணை இயக்குனர் ஆய்வு**

**திருவண்ணாமலை,**

திருவண்ணாமலை வட்டாரத்தில் செயல் படுத்தப்படும் வேளா ண்மை திட்டப் பணி களை வேளாண்மை துணை இயக்குனர் (மத்திய திட்டம்) சு.கிருஷ் ணராஜ் ஆய்வு செய்தார்.

<u>வேளாண்மை திட்டப்பணிகள்</u>

திருவண்ணாமலை வட்டாரத்தில் வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் அறுவடை செய்த கரும்பு வயலில் உள்ள சோகையினை மக்க வைக்கும் நிலப் போர்வை முறை செயல் விளக்கத்தினை பள்ளி கொண்டாப்பட்டு கிராமத்தில் இளங்கோ என்ற விவசாயி வயலில் நடந்த செயல் விளக்கத்தினை வேளாண்மை திட்டப்பணிகள் வேளாண்மை துணை இயக்குனர் (மத்திய திட்டம்) சு.கிருஷ்ணராஜ் ஆய்வு செய்து அறிவுரை வழங்கினார்.

வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் கீழ்நாத்தூர் கிராமத்தில் தனபால் நிலத்தில் திருந்திய நெல் சாகுபடி முறை யில் சாகுபடி செய்யப்பட்டுள்ள ஏடிடி–37 பயிரினையும், உடையானந்தல் கிராமத்தில் கண்ணன் நிலத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள ஏடிடிஆர்–45 பயிரினையும் , அதே விவசாயி நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்பு பயிரினையும் பார்வையிட்டு அறிவுரை வழங்கினார்.

**<u>நெல் சாகுபட</u>**

தென்மாத்தூர் கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்யப் பட்டுள்ள ஏடிடி–37 விதை பண்ணை பயிரினையும் பார்வையிட்டு அறிவுரை வழங்கினர். ஆய்வின் போது ரா.பெரியசாமி வேளாண்மை உதவி இயக்குனர் திருவண்ணாமலை முத்துராம், வேளாண்மை அலுவலர் (மத்திய திட்டம்) சிவலிங்கம் விரிவாக்க உதவியாளர் உடன் இருந்தனர். ஆய்விற் கான ஏற்பாடு களை விசுவநாதன், உதவி வேளாண்மை அலுவலர், திருவண்ணா மலை செய்திருந்தார்.

**நாமக்கல்லில் ரூ.1 கோடியே 40 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**



ஏலத்திற்கு அடுக்கி வைக்கப்பட்டு இருந்த பருத்தி மூட்டைகளை படத்தில் காணலாம்.

**நாமக்கல்,**

நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் நேற்று 6 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ.1 கோடியே 40 லட்சத்துக்கு ஏலம் போனது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

<u>பருத்தி ஏலம்</u>

நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்கத்தின் தலைவர் தென்னரசு மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடை பெற்றது. இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம் பட்டி என மாவட்டம்

முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் ஏறத்தாழ 6 ஆயிரம் மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

ரூ.1 கோடியே 40 லட்சத்துக்கு விற்பனை

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.1 கோடியே 40 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 602 முதல் ரூ.5 ஆயிரத்து 470 வரைக்கும், டி.சி.எச். ரக பருத்தி முதல் தரம் ரூ.7 ஆயிரத்து 156 முதல் ரூ.7 ஆயிரத்து 689 வரைக்கும், 2-ம் தரம் ரூ.5 ஆயிரத்து 261 முதல் ரூ.5 ஆயிரத்து 681 வரைக்கும், சுரபி ரக பருத்தி ரூ. 7 ஆயிரத்து 10 முதல் ரூ. 7 ஆயிரத்து 589 வரைக்கும் ஏலம் போனது.

இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர். இந்த வாரம் பருத்தி மூட்டை சற்று விலை அதிகம் போனதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**முதல்-அமைச்சர் உத்தரவுப்படி ஓசூர் கெலவரப்பள்ளி அணையில் இருந்து நீர் திறப்பு 8 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன**



ஓசூர் கெலவரப்பள்ளி அணையில் இருந்து விவசாய பாசனத்திற்காக தண்ணீரை
மாவட்ட கலெக்டர் டி.பி.ராஜேஷ் திறந்து வைத்த போது எடுத்த படம்.

**ஓசூர்,** முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவுப் படி ஓசூர் கெலவரப்பள்ளி அணையில் இருந்து பாசனத்திற்காக நேற்று தண்ணீர் திறந்து விடப் பட்டது. இதன் மூலம் 8 ஆயிரம் ஏக்கர் நிலங் கள் பாசன வசதி பெறுகின் றன.

<u>கெலவரப்பள்ளி அணை</u>

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் கெலவரப்பள்ளி அணை உள்ளது. இங்கு முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவுப்படி, வலது மற்றும் இடதுபுற பிரதான கால்வாய் மற்றும் பிரிவு கால்வாய்களில் 2-ம் போக பாசனத்திற்காக நேற்று தண்ணீர் திறந்து விடப் பட்டது.

நிகழ்ச்சிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் டி.பி.ராஜேஷ் தலைமை தாங் கினார். மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணி யன், ஓசூர் உதவி கலெக்டர் பிரவீன் பி.நாயர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழா வில் கலெக்டர் டி.பி.ராஜேஷ், பாசனத்திற்காக தண்ணீரை திறந்து வைத்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறிய தாவது:-

<u>100 நாட்கள் திறக்கப்படுகின்றன</u>

தமிழக முதல்-அமைச்சர் உத்தரவுப்படி, கெலவரப்பள்ளி அணையில் இருந்து இன்று பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இன்று முதல் வருகிற மே மாதம் 17-ந் தேதி வரை 100 நாட்கள் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்படு கிறது.

கெலவரப்பள்ளி அணை யின் இடதுபுற பிரதான கால் வாய் மற்றும் பிரிவு கால்வாய் மூலம் 5 ஆயிரத்து 918 ஏக்கரும், வலதுபுற பிரதான கால்வாய் மூலம் 2 ஆயிரத்து 82 ஏக்கரும் என மொத்தம் 8 ஆயிரம் ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

<u>22 கிராமங்கள்</u>

இதன் மூலம் ஓசூர் தாலுகா வில் உள்ள தட்டகானப்பள்ளி, பூதிநத்தம், பெத்தமுத்தாளி, முத்தாளி, அட்டூர், கதிரேப் பள்ளி, மாரசந்திரம், கொத்தூர், மோரனப்பள்ளி, தொரப் பள்ளி, திருச்சிப்பள்ளி, காமன் தொட்டி, தின்னூர், சுபகிரி, கோனேரிப்பள்ளி, சின்ன கொல்லு, பெத்தகொல்லு, சாமனப்பள்ளி, சென்னத்தூர்,

அட்டகுறுக்கி, நல்லகான கொத்தப்பள்ளி, மருதண்டப் பள்ளி ஆகிய 22 கிராமங்கள் பயன் பெறுகின்றன.

அணையின் நீர் இருப்பு மற்றும் அணைக்கு வரும் நீர் வரத்து ஆகியவற்றை கருத்தில் கொண்டு 100 நாட்களுக்கு சுழற்சி முறையில் 10 நாட் களுக்கு தொடர்ந்து தண்ணீர் திறந்து விடப்படும். அடுத்த 5 நாட்கள் நிறுத்தியும் வழங்கப் படும். ஓசூர் கெலவரப்பள்ளி அணையின் மொத்த நீர்மட் டம் 44.28 அடியாகும். இன் றைய அணையின் நீர்மட்டம் 42.97 அடியாகும். வலதுபுற பிரதான கால்வாய் வழியாக வினாடிக்கு 26 கன அடி தண்ணீரும், இடதுபுற பிரதான கால்வாய் வழியாக 62 கன அடி தண்ணீரும் திறந்து விடப் படுகிறது. விவசாயிகள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக விளைச்சல் பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் அசோக்குமார், ஊத்தங்கரை மனோரஞ்சிதம் எம்.எல்.ஏ., ஒன்றிய குழு தலைவர் புஷ்பாசர்வேஷ், நகராட்சி துணைத்தலைவர் ராமு, கெல வரப்பள்ளி ஊராட்சி தலை வர் பாலம்மா ராமச்சந்திரப்பா, மாவட்ட கவுன்சிலர்கள் முத்துலட்சுமி ராமச்சந்திரன், மஞ்சுளா ரங்கநாத், பொதுப் பணித்துறை செயற்பொறி யாளர் ஜெகநாதன், நீர்பாசன சங்க தலைவர் பிரகாஷ், தாசில்தார் அமீதுல்லா மற் றும் பலர் கலந்து கொண் டனர்.

**கூடலூர் பகுதியில் புளி விலை குறைவால் விவசாயிகள் கவலை**



**கூடலூர்,**

கூடலூர் பகுதியில் புளி விலை குறைந்துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**புளி விளைச்சல் அதிகரிப்பு**

தேனி மாவட்டம் கூடலூரில் மேற்குத்தொடர்ச்சி மலை அடிவார பகுதிகளில் உள்ள மானாவாரி நிலங்களில் புளி மற்றும் இலவ மரங்கள் வளர்க் கப்படுகின்றன. இங்கு விளை யும் புளியை வாங்கி செல்வ தற்காக தேனி, கோகி லாபுரம், மதுரை, திண்டுக்கல் போன்ற இடங்களில் இருந்து மொத்த வியாபாரிகள் வருகின்றனர். அதன்படி இந்த ஆண்டு புளி சீசன் கடந்த மாதம் தொடங் கியது. சீசன் தொடங்கியது முதல் புளி வரத்து அதிகமாக இருக்கிறது.

விவசாயிகளிடம் இருந்து புளியை, இந்த பகுதிகளில் உள்ள சிறு வியாபாரிகள் கொள்முதல் செய்து தனியாக களம் அமைத்து புளியை ஓடு நீக்கி மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்து வருகின் றனர். இதற்காக களிமண் மற்றும் சிமெண்டு தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கூட லூர் பகுதியில் களிமண்ணா லும், கம்பம் பகுதியில் சிமெண்டு கொண்டும் களங் கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு புளி ஓடு நீக்கி பதப்படுத் தப்பட்டு தேவையான அள வில் வியாபாரிகளுக்கு விற் பனை செய்யப்படுகிறது.

**விலை குறைவு**

இந்த நிலையில் வரத்து அதி கரிப்பால் புளி விலை குறைய தொடங்கி உள்ளது. கடந்த வாரம் வரை 36 கிலோ எடை கொண்ட தோலுடன் கூடிய புளி ரூ.400 முதல் ரூ.450 வரை விலைபோனது. அதே போல் தோல் நீக்கிய புளி 100 கிலோ, ரூ.2 ஆயிரத்து 600–க்கு விற் பனையானது. ஆனால் இந்த வாரம் விலை திடீரென குறைந் துள்ளது. அதாவது தோலுடன் கூடிய புளி ரூ.300 முதல் ரூ.350 வரையும், தோல் நீக்கிய புளி ரூ.2 ஆயிரத்து 350 முதல் ரூ.2 ஆயிரத்து 400 வரையும் விலை

போனது. இந்த திடீர் விலை குறைவால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். புளி பறிப்பதற்கு ஒரு நாளைக்கு கூலியாக ஆண் தொழிலாளிக்கு ரூ.500–ம், பெண் தொழிலா ளிக்கு ரூ.300–ம் வழங்கப் படுறது.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், புளி இந்த விலைக்கு விற்றால் ஆட் களுக்கு சம்பளம் கொடுப் பதற்குகூட கட்டுப்படியாகாது. மேலும் மேகமலை வனப்பகு திக்குள் உள்ள புளிய மரங்கள் முன்பு ஏலம் விடப்பட்டு வந்தன. தற்போது மேகமலை வன சரணாலயமாக மாற்றப் பட்டதால் கடந்த 2 ஆண்டு களாக அந்த புளிய மரங்கள் ஏலம் விடப்படுவதில்லை. அங்கு இருந்து வனத்துறை அதிகாரிகளுக்கு தெரியாமல் பொதுமக்கள் புளியம்பழங் களை பறித்து வந்து வியாபாரி களுக்கு குறைந்த விலைக்கு கொடுத்து விடுகின்றனர். இத னால் வியாபாரிகள் எங்களிடம் இருந்து குறைந்த விலைக்கு கேட்கின்றனர் என்று வேதனையுடன் தெரிவித்தனர்.

**12 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் கலெக்டர் வேண்டுகோள்**

**திருப்பூர்** மாவட்டத்தில் 12 இடங்களில் நேரடி நெல் கொள் முதல் நிலையங்கள் திறக்கப் பட்டு உள்ளது. விவசாயிகள்தங்கள் நெல்லை நேரடி கொள் முதல் நிலையங்களில் விற் பனை செய்து பயன் அடையலாம் என்று கலெக்டர் ஜி.கோவிந்த ராஜ் வேண்டுகோள் வைத்துள்ளார்.

நெல் கொள்முதல் நிலையங்கள்

திருப்பூர் மாவட்டத்தில் நடப்பு 2013-14-ம் ஆண்டு சம்பா பருவத்தில் பயிரிடப் பட்டு அறுவடை செய்யப் பட்டு உள்ள நெல்லை விவ சாயிகளிடம் இருந்து கொள் முதல் செய்ய தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகத்தின் மூலம் மடத்துக்குளம், காங் கயம், தாராபுரம் ஆகிய தாலுகா பகுதிகளில் நேரடி நெல்கொள்முதல் நிலையங் கள் தொடங்கப்பட்டு செயல் பட்டு வருகிறது.

அதன்படி மடத்துக்குளம், கல்லாபுரம், கணியூர், வெள்ளகோவில், முத்தூர், வேலம்பாளையம், பழைய கோட்டை, நத்தக்காடையூர், பரஞ்சேர் வழி ஆகிய 9

இடங் களில் நேரடி நெல் கொள் முதல் நிலையங்கள் செயல் பட்டு வருகிறது. தாராபுரம் தாலுகாவில் அலங்கியம், குளத்துப்பாளையம், கோவிந்தாபுரம் ஆகிய இடங்களில் மேலும் 3 நேரடி நெல் கொள்முதல் நிலை யங்கள் இன்று (வெள்ளிக் கிழமை) முதல் தொடங்கப் பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட உள்ளது.

ஆதாரவிலை

தமிழக அரசு குறைந்தபட்ச ஆதார விலையாக கிரேடு ‘ஏ’ ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1345-ம், ஊக்கத் தொகையாக ரூ.70-ம், என மொத்தம் ரூ.1415, பொது ரக நெல்லுக்கு குறைந்தபட்ச ஆதார விலையாக ரூ.1310-ம், ஊக்கத்தொகையாக ரூ.50-ம் என ரூ.1360-ம் நிர்ணயிக்கப் பட்டு உள்ளது.

எனவே திருப்பூர் மாவட் டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் தற்போது நடப்பு சம்பா பருவத்தில் அறு வடை செய்த நெல்லை தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் திறக்கப்பட்டு உள்ள நேரடி நெல்கொள்முதல் நிலையங் களில் எந்தவித இடைத்தரகர் கள் இல்லாமல் சரியான எடை வைத்து அரசு நிர்ணயித்துள்ள ஊக்கத் தொகையுடன் கூடிய ஆதார விலைக்கு நெல்லை விற்பனை செய்து பயன் அடையலாம்.

இந்த தகவலை திருப்பூர் மாவட்ட கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் தெரிவித் துள்ளார்.

**தஞ்சை மாவட்டத்தில் 1 லட்சத்து 31 ஆயிரம் டன் நெல் கொள்முதல் முறைகேடுகளை தடுக்க 2 கண்காணிப்பு குழு அமைப்பு**

**தஞ்சாவூர்,**

தஞ்சை மாவட்டத்தில் 1 லட்சத்து 31 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது. மேலும் முறைகேடுகளை தடுக்க 2 கண்காணிப்பு குழுக்களும் அமைக்கப்பட்டு உள்ளது.

<u>கலெக்டர் ஆய்வு</u>

தஞ்சையை அடுத்த சித்திரக்குடி மற்றும் தென்னங்குடி கிராமங்களில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கலெக்டர் சுப்பையன் திடீர் ஆய்வு செய்தார். அப்போது அவர் நெல் கொள்முதல் நிலையங்களுக்கு வந்திருந்த விவசாயிகளிடம் குறைகள் ஏதேனும் உள்ளதா? என கேட்டறிந்தார். பின்னர் கலெக்டர் கூறியதாவது:-

முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவுப்படி இந்த ஆண்டு சம்பா நெல் கொள்முதல் பருவத்தில் விவசாயிகள் அனைவரும் பயன்பெறும் வகையில் அரசின் ஊக்கத் தொகையாக சன்னரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.70ம், சாதா ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50ம் சேர்த்து கொள்முதல் விலையை சன்ன ரகம் குவி¢ண்டால் ரூ.1415 என்றும், சாதா ரகம் ரூ.1360ம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<u>20 சதவீதம் ஈரப்பதம்</u>

தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளின் வேண்டு கோளை ஏற்று முதல்-அமைச்சர் ஜெயலலிதா நெல்லின் ஈரப்பத அளவை 17 சதவீதம் என்பதை தளர்த்தி 20 சதவீதம் வரை கொள்முதல் செய்யவும், சேதமடைந்த, நிறம் மாறிய நெல்லின் அளவை 4 சதவீதம் என்பதை 5 சதவீதம் வரை கொள்முதல் செய்யவும் ஆணையிட்டுள்ளார். இந்த தளர்வு 30-9-2014 வரை கொள்முதல் செய்யப்படும் சம்பா நெல்லுக்கு பொருந்தும்.

விவசாயிகளுக்கு சிரமம் ஏதுமின்றி, அவர்கள் கொண்டு வரும் நெல் முழுவதையும் கொள்முதல் செய்து உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்ய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. விவசாயிகளின் தேவைக்கேற்ப அனைத்து இடங்களிலும் போதுமான அளவுக்கு கொள்முதல் நிலையங்களை திறக்க முதல்-அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். தற்போது தஞ்சை மாவட்டத்தில் 394 கொள்முதல் நிலையங்களும், 8 மொபைல் நிலையங்களும் ஆக மொத்தம் 402 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது.

<u>கண்காணிப்பு குழு</u>

இதுவரை தஞ்சாவூர் மாவட்டத்தில் 1 லட்சத்து 31 ஆயிரத்து 404 மெட்ரிக்டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கொள்முதல் நிலையங்களில் முறைகேடுகளை தடுக்கும் கண்காணிப்பு நடவடிக்கைளுக்காக மாவட்ட அளவில் 2 சிறப்பு கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார். ஆய்வின் போது, தஞ்சை தாசில்தார் காமராஜ் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**விவசாயிகளுக்கு, மானிய விலையில் மின் மோட்டார்கள் வேளாண்மை இணை இயக்குனர் வழங்கினார்**



பொன்னம்பட்டி கிராமத்தில் நடந்த நிகழ்ச்சியில் ஒரு விவசாயிக்கு மானிய தொகைக்கான காசோலையை வேளாண்மை இணை இயக்குனர் ஷாஜகான் வழங்கிய போது எடுத்த படம்.

**அரிமளம்** ஒன்றியத்தில் நடந்த நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு மானிய விலை யில் மின்மோட்டார் களை வேளாண்மை இயக்குனர் வழங்கினார்.

<u>விவசாயிகளுக்கு பயிற்சி</u>

அரிமளம் ஒன்றியத்தில் விதை கிராமத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான பயிற்சி, பொன்னம்பட்டி கிராமத்தில் நடைபெற்றது. பயிற்சிக்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ஷாஜஹான் தலைமை தாங்கி சிறப்புரை யாற்றினார். அப்போது அவர் கூறியதாவது;-

விவசாயிகள் தங்களுக்கு தேவையான தரமான, நல்ல முளைப்புத் திறன் கொண்ட, பிற ரக கலப்பு இல்லாத, நல்ல மகசூல் தரக்கூடிய விதைகளை, தாங்களே உற்பத்தி செய்து கொள்வதே விதை கிராமத் திட்டத்தின் முக்கிய நோக்கம். இதனால் தரமான விதைகள் உரிய காலத்தில் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் கிடைக்கின்றது. மேலும் இந்த திட்டத்தில் விவசாயிகள் ஒரு குழுவாக இணைந்து செயல்பட்டால் ஒரு சுய தொழிலை உருவாக்கி கொண்டு அதிக லாபம் பெறமுடியும்.

இவ்வாறு அவர் பேசி னார்.

மின் மோட்டார்கள்

இதைத்தொடர்ந்து மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நாகேந்திரன், விதை சான்று உதவி இயக் குனர் வைத்தியநாதன், அரி மளம் வேளாண்மை உதவி இயக்குனர் உதயகுமார் ஆகி யோர் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.மேலும் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின்(அரிசி) கீழ் தலா ரூ.10 ஆயிரம் மானிய விலையில் 6 மின்மோட் டார்களையும், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் திருந்திய நெல் சாகுபடியை பிரபலப்படுத்தும் இனத்தில் பின்னேற்பு மானியமாக தலா ரூ.1,500-ம் மூன்று விவசாயிகளுக்கு காசோலையாகவும் மற்றும் விவசாயிகளுக்கு ஒருங் கிணைந்த கையேடுகளையும் வேளாண்மை இணை இயக் குனர் வழங்கி னார். பயிற்சியில் தொழில்நுட்பங்களை விளக்கும் கருத்துக்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. வேளாண்மை அலுவலர் கருப்பையா வரவேற்று பேசி னார். முடிவில் வேளாண்மை துணை அலுவலர் பாலசுப்ர மணியன் நன்றி கூறினார்.

**தூத்துக்குடி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு மானிய விலையில் வைக்கோல் வினியோகம்**

**தூத்துக்குடி** மாவட்டத்தில் கால்நடைகளுக்கு மானிய விலையில் வைக்கோல் வினியோகம் செய்யப்படுகிறது. அதற்கு தேவையான வைக்கோல் கொள்முதல்

செய்யும் பணி தொடங்கி இருப்பதாக கலெக்டர் எம்.ரவிகுமார் தெரிவித்து உள்ளார்.

இதுபற்றி அவர் வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பில் கூறிஇருப்பதாவது:-

மானிய விலையில்...

தமிழக அரசு, கால்நடை வளர்ப்போர் நலன் கருதி கால்நடைகளுக்கு உலர் வைக்கோல் தீவனத்தை மானிய விலையில் வழங்க ரூ.12½ கோடி முதல் கட்டமாக ஒதுக்கீடு செய்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் இந்த திட்டத்தை செயல்படுத்த ரூ.60 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இதையொட்டி புதுக்கோட்டை, கருங்குளம், தென்திருப்பேரை, மெஞ்ஞானபுரம், கோவில்பட்டி, விளாத்திகுளம் ஆகிய 6 இடங்களில் உள்ள அரசு கால்நடை மருந்தகங்களில் தீவன கிடங்கு அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

வைக்கோல் கொள்முதல்

இந்த 6 தீவன கிடங்குகளுக்கு தனித்தனியாக தரமான உலர்ந்த வைக்கோல் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. அதாவது வைக்கோலை 21 கிலோ கட்டுகளாக கட்டி, வண்டியில் ஏற்றி குறிப்பிட்ட தீவன கிடங்குகளில் இறக்கி, அடுக்கி போர் போட்டுத் தந்து வாரம் 15 டன் வீதம் தொடர்ந்து 2 முதல் மூன்று மாதங்களுக்கு வழங்கலாம். இதற்கு விருப்பம் உள்ள விவசாயிகள் ஒரு கிலோ வைக்கோலின் விலையை குறிப்பிட்டு மூடி முத்திரையிடப்பட்ட போட்டி விலைப்புள்ளியினை (கொட்டேசன்) கொடுக்கலாம். இதன் மூலம் வழங்கல் ஆணை பெற்றால் 10 நாட்களுக்குள் வினியோகத்தை தொடங்க வேண்டும்.

இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்ட, வைக்கோல் வினியோகம் செய்ய விரும்பும் விவசாயிகள் வருகிற 16-ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளியை, மாவட்ட ஆட்சித் தலைவர்,

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி என்ற பெயரில், தூத்துக்குடி புதுக்கிராமத்தில் கால்நடை மருத்துவபெருமனை வளாகம், கால்நடை பராமரிப்புத்துறை, மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் உள்ள “வைக்கோல் விலைப்புள்ளி“ பெட்டியில் போட வேண்டும். இல்லை என்றால் பதிவு அஞ்சல் மூலமாக இந்த முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

தொடர்பு கொள்ள...

இவ்வாறு பெறப்படும் மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் மறுநாள் 17-ந் தேதி காலை 10.30 மணிக்கு மாவட்ட வைக்கோல் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் போட்டி விலை புள்ளியினை அனுப்பியவர்கள் கலந்து கொள்ளும் கூட்டத்தில் தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் முன்னிலையில் திறக்கப்படும். அதில் குறைந்த போட்டி விலைப் புள்ளி கோரியவர்களுக்கு வழங்கல் ஆணை மாவட்ட கலெக்டரால் வழங்கப்படும். வைக்கோல் வினியோகம் செய்ய விரும்பும் விவசாயிகள் விலைப்புள்ளிக்கான விண்ணப்பத்தை அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களிலோ அல்லது கால்நடை பராமரிப்புத்துறை அலுவலகங்களிலோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விபரங்களுக்கு மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தை 0461 - 2300517 என்ற டெலிபோன் எண்ணிலும், 2)திருச்செந்தூர் கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை 04639 -245135 என்ற டெலிபோன் எண்ணிலும், 3) தூத்துக்குடி உதவி இயக்குநர் அலுவலகத்தை 0461 - 2322802 என்ற டெலிபோன் எண்ணிலும், 4) கோவில்பட்டி உதவி இயக்குநர் அலுவலகத்தை 04632 -221911 என்ற டெலிபோன் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு கலெக்டர் எம்.ரவிகுமார் தெரிவித்து உள்ளார்.